வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 26.06.2024 புதன்கிழமை இதழ் : 178 பக்கங்கள் : 12

ஆள்கடத்தல் விவகாரத்தில்

# அதிகாரிகளை பொறுப்புக்கூறச் செய்ய இலங்கை அரசு அக்கறை காட்டவில்லை!

## அமெரிக்க இராஜாங்க திணைக்களம்

வாஷிங்டன், ஜூன் 26

**ஆள் கடத்தலை ஒழிப்பதற்கான குறைந்தபட்ச தராதரங்களை இலங்கை பூர்த்தி செய்யவில்லை என்று கண்டித்துள்ள அமெரிக்கா எனினும், இலங்கை இதற்கான முயற்சிகளை மேற்கொள்கின்றது என்றும் குறிப்பிட்டுள்ளது.**

ஆள்கடத்தல் தொடர்பான அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் 2024ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையிலேயே அமெரிக்கா இதனைத் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில், கடந்த வருடத்தைவிட ஆள்கடத்தலை கட்டுப்படுத்தவதற்கான நடவடிக்கைகளில் இலங்கை அரசாங்கம் முன்னேற்றத்தை காண்பித்துள்ளது. ஆள்கடத்தல்களில் ஈடுபடுபவர்களுக்கான தண்டனைகளை அதிகரிப்பது

11

# இந்திய மீனவரை பிடிக்கமுயன்ற கடற்படை சிப்பாய் உயிரிழப்பு!

## நெடுந்தீவு கடற்பரப்பில் நேற்று சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 26

நெடுந்தீவு கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்த இந்திய மீனவர்களை பிடிக்க முயன்ற கடற்படை சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்.

இந்திய மீனவர்களை கைதுசெய்வதற்காக அவர்களின் படகில் ஏறிய போது மீனவர்கள் ஆபத்தான முறையில் தமது படகை செலுத்தி கடற்படைபடகுடன் மோதுவது போன்று பயணித்த போது குறித்த சிப்பாய் படுகாயமடைந்தார்.

11



# 15ஆம் நூற்றாண்டு வரை இராமர் பாலம் பயன்பாட்டில்!

## ஐரோப்பிய விண்வெளி ஆய்வு மையம்!

சென்னை, ஜூன் 26

இந்தியாவின் தமிழகத்தின் தனுஷ்கோடி - இலங்கையின் தலைமன்னாருக்கும் இடையேயான இராமர் பாலத்தின் செயற்கைக்கோள் ஒளிப்படத்தை ஐரோப்பிய விண்வெளி ஆய்வு மையம் வெளியிட்டுள்ளது.

அத்துடன், கடந்த 15ஆம் நூற்றாண்டு வரை பயணிக்கக்கூடியதாக இந்தப் பாலம் இருந்தது என்றும் அந்த ஆய்வு மையம் குறிப்பிட்டுள்ளது.

ஐரோப்பிய விண்வெளி ஆய்வு மையம் தனது எக்ஸ் சமூகவலைதள பக்கத்தில்

11

# விசேடமாக கூடுகின்றது பாராளுமன்று

கொழும்பு, ஜூன் 26

எதிர்வரும் ஜூலை 2ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு பாராளுமன்றம் விசேடமாகக் கூடுகின்றது.

பிரதமர் தினேஷ் குணவர்த்தனவின் வேண்டுகோளுக்கு இணங்க பாராளுமன்றத்தின் 16ஆவது நிலையியல் கட்டளையின் பிரகாரம் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன விசேட பாராளுமன்ற அமர்வுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

கடந்த 20 ஆம் திகதி பாராளுமன்ற அமர்வு முடிந்து சபை ஒத்திவைக்கப்பட்ட போது எதிர்வரும் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பாராளுமன்றம் மீண்டும் கூடுமென அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த விசேட அமர்வில், நாட்டின் பொருளாதார நிலை - பொருளாதாரம் சீர்குலைந்தமைக்கான நிலைமை தொடர்பில் விசேட அறிக்கை வெளியிடப்படவுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (ஐ)

# அதிபர்கள், ஆசிரியர்கள் இன்று சுகயீன விடுமுறை போராட்டம்!

## இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கமும் ஆதரவு

யாழ்ப்பாணம், ஜூன் 26

இன்றைய தினம் முன்னெடுக்கப்படும் சுகயீன விடுமுறை போராட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அதிபர்கள், ஆசிரியர்களுக்கு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

சம்பள அதிகரிப்பு, சம்பள முரண்பாட்டுக்கு தீர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து இலங்கை ஆசிரியர் சங்கம் இன்று புதன்கிழமை சுகயீன விடுமுறை போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தது. நாடு முழுவதும் முன்னெடுக்கப்படும் இந்தப் போராட்டத்துக்கு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கமும் ஆதரவு

11

## அமைச்சரவையில் மீண்டும் மாற்றம்?

கொழும்பு, ஜூன் 26

அடுத்த சில வாரங்களில் அமைச்சரவையில் மாற்றம் நிகழும் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பான உரையாடல்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே ஆரம்பித்து விட்டார். இது அரசியல் கட்சிகள்

11

# விடுதலை புலிகளுக்கு அறிவித்தல் இந்தியாவின் தீர்ப்பாயம் விடுத்தது

புதுடில்லி, ஜூன் 26

"தமிழீழ விடுதலைப் புலிகளை சட்டவிரோத அமைப்பு என்று ஏன் பிரகடனப்படுத்தக்கூடாது என்பதற்கான காரணங்களை விளக்கவேண்டும்", என்று இந்தியாவின் தீர்ப்பாயம் ஒன்று அறிவித்தல் விடுத்துள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்புக்கு விடுக்கப்பட்ட இந்த அறிவித்தலை புதுடில்லி மேல் நீதிமன்றில் இயங்கும் சட்டவிரோத செயல்பாடுகளை தடுக்கும் தீர்ப்பாயம் விடுத்துள்ளது.

இந்திய அரசு கடந்த மே மாதம் விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான தடையை 5 ஆண்டுகளுக்கு நீடித்திருந்தது.

இது தொடர்பில் இந்திய வெளிவிவகார அமைச்சு விடுத்திருந்த குறிப்பில், "2009ஆம் ஆண்டு

11

# கோரிக்கைகளை நிறைவேற்ற திறைசேரியில் பணம் இல்லை!


## அமைச்சர் பந்துல குணவர்த்தன

கொழும்பு, ஜூன் 26

தொழிற்சங்கங்கள் முன்வைக்கும் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு தேவையான பணம் திறைசேரியில் இல்லை. அடுத்த வருட வரவு - செலவு திட்டத்தில் அவர்களின் பிரச்னைக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

பல தொழிற்சங்கங்கள் முன்னெடுத்து வரும் போராட்டங்களுக்கான தீர்வு தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

11



# ஆச்சரியமளிக்கும் இராட்சத மாவிலை!

தென்மராட்சி, ஜூன் 26

வழமைக்கு மாறாக மாவிலை ஒன்று 60 சென்ரிமீற்றர் நீளத்தில் வளர்ந்துள்ளது. சாவகச்சேரி, டச்சு வீதியிலுள்ள ஒருவரின் வீட்டிலேயே இந்த மாவிலை காணப்படுகின்றது. இந்த மாவிலையை

11

# யாழ். அரச அதிபராக பிரதீபன் நியமனம்!



கொழும்பு, ஜூன் 26

யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபராக ம. பிரதீபன், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபராக எஸ். முரளிதரன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்களை பிரதமர் தினேஷ் குணவர்த்தன பொது நிர்வாக அமைச்சில் வைத்து நேற்று செவ்வாய்க்கிழமை வழங்கி வைத்தார்.

யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபராக

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

இதுவரை சிவில் சமூகத்தினர் மத்தியில் மாத்திரம் முடிவெடுக்கப்பட்டு - முன்னெடுக்கப்பட்டு வந்த தமிழ் பொதுவேட்பாளர் விடயத்தில் இப்போது அரசியல் கட்சிகள் சில உறுதியான முடிவுக்கு வந்திருக்கின்றன.

"தமிழ் மக்கள் பொதுச் சபை" என்ற பெயரில் அண்மையில் ஒன்றிணைந்த சிவில் சமூக அமைப்புகள், பொதுவேட்பாளர் விடயத்தில் தொடர்ச்சியான சந்திப்புகளை நடத்தி வருகின்றன. அவர்கள் தனித்தனியாக அரசியல் கட்சிகளை சந்தித்திருந்தபோதிலும், அவர்களில் சி. வி. விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணி மாத்திரமே பகிரங்கமாக அதற்கு ஆதவான நிலைப்பாட்டை அறிவித்திருந்தது. அப்படி அறிவித்திருந்தாலும்கூட விக்னேஸ்வரன் கடைசிவரை தனது முடிவில் உறுதியாக இருப்பாரா என்ற கேள்வி அவரைத் தெரிந்தவர்கள் மத்தியில் உண்டு.

அண்மையில், ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார, நடக்கவிருக்கும் ஜனாதிபதி தேர்தலையும் பாராளுமன்றத் தேர்தலையும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒத்திவைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தபோது முதல் ஆளாக அதற்கு ஆதரவாக அறிக்கை விட்டவர் அவர். சிலவேளை, பாராளுமன்றத்தில் இன்னும் இரண்டு ஆண்டுகள் இருக்கலாம் என்பதற்காக அவர் அப்படி அவசரப்பட்டு சொன்னாரா என்பது தெரியவில்லை. ஆனாலும் இவ்வாறு தேர்தல்களை ஒத்திவைப்பது பற்றிய அவரது அறிவிப்பு அவர் பற்றிய அபிப்பிராயங்களை கேள்விக்கு உட்படுத்தியது என்னவோ உண்மைதான்.

அடுத்தவர், ஈ. பி. ஆர். எல். எவ். தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன். ஆரம்பம் முதலே பொதுவேட்பாளர் என்ற எண்ணக்கருவுக்கு ஆதரவாக இருந்து வருபவர் அவர். ஆனாலும், அவரது கட்சியும் அங்கம் வகிக்கும் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியிலுள்ள புளொட், ரெலோ கட்சிகளுடன் சிறீகாந்தாவின் தமிழ் தேசியக் கட்சி மற்றும் ஜனநாயக போராளிகள் கட்சி ஆகியன இணைந்து ஒரு கூட்டணியாக முடிவெடுக்காமல் இருந்துவந்த நிலையில் நேற்றுமுன்தினம் வவுனியாவில் கூடிய அந்த கூட்டணியின் மத்திய குழுக்கூட்டத்தில் தமிழ் பொதுவேட்பாளர் விடயத்தில் தொடர்ந்து உறுதியாக பயணிப்பது என்று முடிவெடுக்கப்பட்டிருக்கின்றது.

கொழும்பின் பிரபல ஆங்கில பத்திரிகை ஒன்றில் வெளிவரும் பத்தி ஒன்றில், கடந்த வாரம் கொழும்பு வந்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சரின் வருகை பற்றி எழுதப்பட்டிருந்தது. அதில் அவர் தமிழ் கட்சிகளுடன் நடத்திய சந்திப்பு பற்றிய குறிப்பின்போது நடந்த சம்பவம் ஒன்று விபரிக்கப்பட்டிருந்தது.

சந்திப்பு முடிந்து வெளியேறும் போது ஜெய்சங்கரை தனியாக எதிர்கொண்ட புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தன் அவரிடம், "இந்த தமிழ் பொதுவேட்பாளர் விடயத்தில் நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?" என்று கேட்டிருந்தாராம். அதற்கு அவர் சொன்ன பதில்:

"அது நீங்கள் அனைவரும் முடிவுசெய்யவேண்டிய விசயம்" - அவர் இப்படித்தான் சொல்வார் என்பது தெரிந்ததுதான் - அப்படித்தான் சொல்லவும் வேண்டும்.

எல்லோரும் சேர்ந்துதான்- அதாவது, தமிழ் அரசு கட்சியும் சேர்ந்துதான் இது விடயத்தில் முடிவெடுக்கவேண்டும் என்றுதான் சித்தார்த்தன் மாத்திரமன்றி ரெலோவின் செல்வம் அடைக்கலநாதனும் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

அவர்களைப் பொறுத்தவரை தனியாக அரசியல் செய்து கடந்த இருபது வருடங்களாக பழக்கத்தில் இல்லாமல்போய்விட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற கூட்டணியில் அரசியல் செய்தே பழக்கப்பட்டு விட்டார்கள். இப்போது தனியாக பயணிப்பது எத்தகைய முடிவைக் கொண்டுவருமோ என்ற அச்சம் இயல்பானதுதான். ஆனால், தமிழ் அரசு இன்றிருக்கும் நிலையில் எந்த முடிவையுமே ஒருமித்து எடுக்கக்கூடிய நிலையில் இல்லை.

இரண்டு அணிகளாக போயிருக்கும் தமிழ் அரசின் ஓர் அணி ஏற்கனவே பொதுவேட்பாளர் திட்டத்துக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் ஒரு கூட்டத்தை நடத்தியிருந்தது. அவர்களைப் பொறுத்தவரை அது "முட்டாள்தனமான" வேலை. தென்மராட்சியின் க. அருந்தவபாலனின் கூற்றுப்படி, அந்தக் கூட்டத்தில் காணப்பட்ட சுமார் இருநூறு பேரில் கணிசமானவர்கள் கூட்டத்தை ஏற்பாடு செய்த சுமந்திரனின் சகாக்கள் இருவரினால் கொண்டுவரப்பட்டவர்கள். அந்தக் கூட்டத்தில் சுமந்திரன் வீசிய பந்துகள் எல்லாவற்றையும் அதில் கலந்துகொண்ட சிறீகாந்தா, பௌண்ட்ரிகளுக்கு அடித்து விளையாடிவிட்டார்.

இப்போது தமிழ் அரசின் மற்றைய குழுவின் தலைவரான சிவஞானம் சிறீதரன், இந்த பொதுவேட்பாளர் முயற்சிக்கு ஆதரவாக மிகப்பிரமாண்டமான கூட்டம் ஒன்றை நடத்துவதற்கு தயாராகி வருகிறார் என்று தெரியவருகின்றது.

இன்றைக்கும் மக்கள் செல்வாக்குள்ள தலைவராக வலம்வரும் சிறீதரனால் அப்படியொரு கூட்டத்தை நடத்திக்காட்டுவது பெரிய விடயமல்ல.

அதுவல்ல நாம் இங்கே சொல்ல வருவது,

தமிழ் அரசும் இணைந்தால்தான், அந்த விடயத்தில் வெற்றிகரமாக பயணிக்க முடியும் என்று நம்பும் ரெலோவும் புளொட்டும் தமிழ் அரசில் உள்ள இதற்கு ஆதரவான சக்திகளுடன் இணைந்து பயணிக்கத் தயாராக வேண்டும். தமிழ் அரசு என்ன முடிவெடுத்தாலும் தான் பொதுவேட்பாளரை தோற்கடிக்க பிரசாரம் செய்வேன் என்று சுமந்திரன் தெளிவாக அறிவித்திருக்கிறார். எனவே, அதற்கு ஆதரவான தமிழ் அரசுக்காரர்களும் தமது ஆதரவு நிலைப்பாட்டில் உறுதியாக இருப்பார்கள் என்று நம்பப்படுவதால் - அவர்களையும் இணைத்துக் கொண்டு பொதுவேட்பாளர் விடயத்தில் தொடர்ந்து கட்சிகளும் பொதுச் சபையும் பயணிக்கவேண்டும்.

ஊர்க்குருவி

## பலாலி விமான நிலையத்தில் சுற்றுலா தகவல் மையம் திறப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 26



பலாலி சர்வதேச விமான நிலையத்தில் பயணிகள் வெளியேறும் பகுதியில் சுற்றுலா பயணி களுக்கான தகவல் தொடர்பு நிலையம் வடக்கு மாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸ் நேற்று திறந்து வைத் தார்.

வடக்கு மாகாணத்தில் சுற்றுலா பயணிகள் இலகுவாகப் பயணிக்கக் கூடிய வரலாற்று சிறப்பு மிக்க இடங்கள், வழிபாட்டு தலங்கள் உள்ளிட்ட விடயங்கள் அடங்கிய சுற்றுலா வழிகாட்டி கையேடுகளைத் தகவல் தொடர்பு நிலையத்தில் இலவசமாக பெற்றுக் கொள்ளமுடியும்.

அத்துடன் வடக்கு மாகாணத்தில் உற்பத்தி செய்யப்படும் கைவினைப் பொருட்களும் இங்கு விற் பனைக்கு வைக்கப்பட்டுள் ளன. சுற்றுலா பயணிகளுக்கான தகவல் தொடர்பு நிலையத்தைத் திறந்து வைத்ததன் பின்னர், விமான நிலைய செயற் பாடுகளை ஆளுநர் அவர்கள் பார்வையிட்டதுடன், விமான பயணிகளுடனும் கலந்துரையாடினார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலா ளர், உள்ளூராட்சி அமைச் சின் செயலாளர், சுற்றுலா பணியகத்தின் தலைவர், விமான நிலைய அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர். (ஐ)

## நவாலியில் திருவாசக சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூன் 26

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகச் சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிகாமன் நிஜலிங்கம் அவர்களின் ஒழுங்கமைப்பில் வாராந்த திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் 11 நவாலி தெற்கு திருவருள்மிகு ஶ்ரீ நாகராஜா ராஜேஸ்வரி அம்பாள் திருக்கோவில்

பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 28 ஆம் வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு இடம்பெறவுள்ளது. மாணிக்கவாசக சுவாமிகள் குரு வணக்கத்தை தொடர்ந்து சொற்பொழிவினை சைவப் புலவர் , பிரசங்க பூஷணம் பொன். சந்திரவேல் அவர்கள் "மாணிக்கவாசகரும் திருத் தேன்ளேணமும்" என்னும் விடயப்பொருளில் சொற்பொழிவும், சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (அ)

## வினாத்தாள் திருத்தலுக்கான கொடுப்பனவுகள் அதிகரிப்பு?

கொழும்பு, ஜூன் 26

கல்வி பொதுத் தராதர சாதாரண தர பரீட்சை மற்றும் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைகளின் திருத்தலுக்கான கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்கான உபகுழுவின் பரிந்துரை கிடைத்துள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த பரிந்துரைகள் அமைச்சரவையின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## 4 கிலோ ஐஸுடன் மூவர் கைது!

கொழும்பு, ஜூன் 26

கொழும்பு மத்திய அஞ்சல் பரிமாற்றகத்தில், 4 கிலோகிராம் ஐஸ் ரக போதைப் பொருளுடன் 3 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் முன்னெடுத்த சோதனையின்போது, இந்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

மெத்தை ஒன்றுக்குள் மறைத்து வைத்து, இந்த ஐஸ் ரக போதைப்பொருளை சந்தேக நபர்கள் கடத்த முற்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

பாகிஸ்தானில் இருந்து இலங்கைக்கு இந்த போதைப்பொருள் அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட ஐஸ் ரக போதைப் பொருளின் பெறுமதி சுமார் 200 மில்லியன் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## சாவகச்சேரியில் புத்தக அரங்க விழா

யாழ்ப்பாணம், ஜூன் 26

தேசிய கலை இலக்கியப் பேரவையின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு "நூறு மலர்கள் மலரட்டும்" என்ற தொனிப் பொருளில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் புத்தக அரங்க விழாவின் இருபதாவது நிகழ்வு இம் மாதம் 28ஆம், 29ஆம், 30 ஆம் திகதிகளில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இப் புத்தக அரங்க விழாவின் தொடக்க நிகழ்வாக ஈழத்து நூல்களை அறிவோம் என்ற தலைப்பிலான நூல்களின் அறிமுகமும் கலந்துரையாடலும் நிகழ்வு ஈழத்தின் தலைசிறந்த தமிழ்க் கவிஞர்களுள் ஒருவரும், ஆய்வாளரும், நாடக ஆசிரியரும், மொழிபெயர்ப்பாளருமான இ.முருகையனின் 15 ஆவது ஆண்டு நினைவையொட்டி அவரது நினைவு அரங்கில் ஓய்வுநிலை அதிபர் புலவர் மு.பாலசுப்பிரமணியம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் நூல் அறிமுக உரைகளை பி.முத்துலிங்கத்தின் "அரசியல் பொருளாதாரம், தத்துவம் ஒரு பார்வை" நூல் தொடர்பாக ஓய்வுநிலை அதிபர் ப.செல்லத்துரையும், வயிரமுத்து திவ்வியராஜனின் "ஒரு சின்னக்கதை" சிறுகதைத் தொகுப்பு பற்றி ஆய்வாளர் சி.நிசாகரனும், குழந்தை ம.சண்முகலிங்கத்தின் "சத்திய சோதனை" நாடக நூல் தொடர்பாக ஓய்வுநிலை ஆசிரியர் ச.மார்க்கண்டுவும், அருண்மொழிவர்மனின் "தாயகக் கனவுகள்" நூல் தொடர்பாக ஆய்வாளர் ச.சத்தியதேவனும் ஆற்றவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து மாலை 5 மணியளவில் சண் நாடகக் குழுவின் தயாரிப்பில், மாவை நித்தியானந்தன் அவர்களின் எழுத்துருவில், பு.கணேசராசாவின் நெறியாள்கையில் "முட்டை" மற்றும் செம்முகம் ஆற்றுகைக் குழுவினரின் தயாரிப்பில், க. சீலனின் நெறியாள்கையில் "எங்கே எங்கே குடை எங்கே" ஆகிய சிறுவர் நாடகங்களும் இடம்பெறுவுள்ளன.

மேலும் இந் நிகழ்வின் விசேட அம்சமான மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும் சனி, ஞாயிறு ஆகிய இரண்டு தினங்களும் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

முற்றிலும் இலவசமாக இடம்பெறும் இந் நிகழ்வில் ஆர்வலர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு தேசிய கலை இலக்கியப் பேரவையினர் அழைப்பு விடுத்துள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
26.06.2024 புதன்கிழமை
குரோதி வருடம், ஆனி 12

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# விடுதலைப் புலிகள்மீதான தடை

இது தொடர்பில் முன்னரும் பல்வேறு சந்தர்ப்பங்களில் "ஈழநாடு" சுட்டிக்காட்டியிருக்கின்றது. ஆனால், விடயங்களை கூர்ந்து நோக்கிச் செயல்படும் அரசியல் திறனைத்தான் காண முடியவில்லை. விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடையை நீக்குமாறு தாக்கல் செய்யப்பட்ட வழக்கை பிரித்தானிய நீதிமன்றம் நிராகரித்திருக்கின்றது. இதில், ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. இது எதிர்பார்க்கப்பட வேண்டிய ஒன்றுதான்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தை 32 நாடுகள் தடை செய்திருக்கின்றன. மேற்குலக நாடுகளைப் பொறுத்தவரையில் விடுதலைப் புலிகளைத் தடை செய்வதற்கு பிரத்தியேக காரணங்கள் எதுவுமில்லை. ஏனெனில், விடுதலைப் புலிகள் இயக்கம் அந்த நாட்டு மக்களுக்கு எதிராக ஒரு குண்டூசியைக்கூட வீசியதில்லை. ஆனாலும், மேற்கு நாடுகள் புலிகள் அமைப்பைத் தடை செய்தன. 1997இல் அமெரிக்கா விடுதலைப் புலிகள் இயக்கத்தை சர்வதேச பயங்கரவாத அமைப்பாக தடை செய்தது. 2007இல் ஐரோப்பிய ஒன்றியம், கனடா ஆகியவையும் தடை செய்தன.

யுத்தம் முடிவுற்று பதினைந்து வருடங்கள் கடந்துவிட்ட பின்னரும்கூட இந்தத் தடைகள் நீக்கப்படவில்லை - இனியும் நீக்கப்படப் போவதில்லை. ஏனெனில், இந்தத் தடைகள் எவையுமே குறித்த நாட்டு மக்களை கருத்தில் கொண்டு போடப்படவில்லை. மாறாக, உலகளாவிய அரசியல் காரணங்களை கருத்தில் கொண்டே போடப்பட்டன. இதனை புலம்பெயர் அமைப்புகளில் உள்ளோர் இன்னும் புரிந்து கொள்ளவில்லையா?

இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் இடையிலான பேச்சின்போது, விடுதலைப் புலிகளுக்கு அரை அந்தஸ்தை மேற்கு நாடுகள் அனைத்துமே வழங்கியிருந்தன. ஏன் அவ்வாறான அரை அந்தஸ்தை வழங்கியிருந்தன?

உண்மையில், அமெரிக்கா விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்தபோதிலும்கூட அந்தத் தடையை பின்பற்றுமாறு மேற்குலக நாடுகளைக் கோரவில்லை - அதற்கான அழுத்தங்களை பிரயோகிக்கவில்லை. மேற்குலக நாடுகளில் நிதி சேகரிப்பு உள்ளடங்கலாக பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சுதந்திரம் அனுமதிக்கப்பட்டது. மேற்கு நாடுகளின் நெகிழ்வான அணுகுமுறைகள்தான் பிறிதொருபுறம் விடுதலைப் புலிகள் வளரவும் வழிவகுத்தது.

மேற்கு நாடுகளில் ஒரு குறிப்பிட்டளவான தமிழ் புலம்பெயர் சமூகம் இருக்கின்ற காரணத்தால் அவர்களுக்கு ஊடாக விடுதலைப் புலிகளின் வால் தங்கள் கையில்தான் இருக்குமென்றே மேற்குலக நாடுகள் கணக்கிட்டிருந்தன. ஆனால், பேச்சு நிகழ்ச்சி நிரலுக்கு எதிராக விடுதலைப் புலிகள் வியூகங்களை வகுக்கத் தொடங்கியதைத் தொடர்ந்தே அனைத்தும் தலைகீழாகின.

இதனைத் தொடர்ந்தே ஐரோப்பிய ஒன்றியமும் கனடாவும் விடுதலைப் புலிகள் இயக்கத்தை பயங்கரவாத அமைப்பாகத் தடை செய்தன. பத்து இலட்சத்துக்கும் மேற்பட்ட புலம்பெயர் மக்கள் இருக்கின்றபோதுதான் இது நடந்தேறியது. புலம்பெயர் சமூகத்தின் அரசியல் ஆற்றல் என்ன என்பதற்கும் இது ஒரு தெளிவான சான்றாகும். விடுதலைப் புலிகள்மீதான மேற்குலக தடை என்பது ஒரு வெளிவிவகார முடிவு. வெளிவிவகார முடிவுகளை எவராலும் கேள்விக்குள்ளாக்க முடியாது - அதற்கு முற்சிக்கவும்கூடாது. அவர்கள் எப்போது தடையை நீக்க வேண்டுமென்று எண்ணுகின்றார்களோ அப்போது அதனை செய்வார்கள்.

## ஆணின் சடலம் மீட்பு

கொழும்பு, ஜுன் 26

குருநாகல் பிரதேசத்தில் பொல்பித்திகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள வனப்பகுதியொன்றிலிருந்து நேற்று முன்தினம் ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பொல்பித்திகம பொலிஸார் தெரிவித்தனர்.

பொல்பித்திகம பகுதியைச் சேர்ந்த 53 வயதுடைய நபரொருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

இவர் கடந்த ஒரு மாத காலமாகக் காணாமல்போயிருந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொல்பித்திகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## 17 வயது சிறுமி மாயம்!

கொழும்பு, ஜுன் 26

மொனராகலை பிரதேசத்தில் கராடுகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சிறுமி ஒருவர் காணாமல் போயுள்ளதாக கராடுகல பொலிஸார் தெரிவித்தனர்.

காரடுகல பகுதியைச் சேர்ந்த 17 வயதுடைய சிறுமியொருவரே இவ்வாறு காணாமல் போயுள்ளார். இவர் நேற்றுமுன்தினம் காணாமல்போயுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சிறுமி தனது சம்பளத்தைப் பெற்றுக் கொள்வதற்காகத் தான் வேலை செய்யும் கடைக்குச் செல்வதாகக் கூறி கடிதம் ஒன்றை எழுதி வைத்துவிட்டு வீட்டை விட்டு வெளியே சென்றுள்ளதாகவும் பின்னர் மீண்டும் வீடு திரும்பவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து காணாமல்போன சிறுமியின் குடும்பத்தினர் இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## மிக்ஸருக்குள் பொரிந்த பல்லி

யாழ்ப்பாணம், ஜுன் 26

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் விற்கப்பட்ட மிக்ஸருக்குள் நேற்று முன் தினம் பொரித்த நிலையில் பல்லி ஒன்று காணப்பட்டுள்ளது.

சந்நிதி ஆலயத்தில் நேற்று முன் தினம் இரவு, ஆனிப் பொங்கல் விசேட பூஜை வழிபாடுகள் இடம் பெற்றன.

இப்பூஜையில் கலந்து கொண்ட ஒருவர், ஆலயச் சூழலில் உள்ள இனிப்புக் கடை ஒன்றில் மிக்ஸரை வாங்கியபோது அதனுள் பொரித்த நிலையில் பல்லி யொன்று காணப்பட்டுள்ளது.

இது குறித்து அப்பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து, பல்லியுடன் காணப்பட்ட மிக்ஸரை பெற்றுக்கொண்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் குறித்த இனிப்பு கடைக்கு



எதிராக பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

குறித்த வழக்கு எதிர்வரும் 27ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## வவுனியா தேக்கவத்தையில் இளைஞர் குழு அட்டகாசம்!

வவுனியா, ஜுன் 26

வவுனியா, தேக்கவத்தைப் பகுதியில் இளைஞர் குழு ஒன்று மேற்கொண்ட தாக்குதலில் இருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, தேக்கவத்தைப் பகுதியில் வசிக்கும் இளைஞர் ஒருவர் குழாய் கிணறு அமைக்கும் தொழில் செய்து வருகின்றார். குறித்த இளைஞர் வவுனியா நகரில் இருந்து வீடு சென்றபோது அவரை வழிமறித்த குழு ஒன்று அவர் மீது போத்தல்கள் மற்றும் தடிகளால் தாக்குதல் நடத்தியுள்ளது.

அத்துடன் குறித்த இளைஞனின் வீட்டுக்குள் நுழைந்து இளைஞனின் தந்தை மீதும் தாதக்குதல் நடத்தியுள்ளது.

காயமடைந்த இருவரும் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

## இணையம் ஊடாக மோசடி; 30 வெளிநாட்டவர்கள் கைது!

கொழும்பு, ஜுன் 26

இணையம் ஊடாக நிதி மோசடியில் ஈடுபட்டதாக கூறப்படும் 30 வெளிநாட்டவர்கள் நீர்கொழும்பு - கொச்சிக்கடைப் பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொச்சிக்கடை - பல்லம்சேன மற்றும் பலகதுரே ஆகிய பிரதேசங்களில் உள்ள இரண்டு விருந்தகங்களில் தங்கியிருந்து இந்த நிதி மோசடி முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது நிதி மோசடிக்காக பயன்படுத்தப்பட்ட 10 கணினிகளை பொலிஸார் பொறுப்பேற்றுள்ளனர்.

கைது செய்யப்பட்ட வெளிநாட்டவர்கள் குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளனர். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயல்படுவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். முயற்சிகள் பலிதமாகும்.

**இடபம்**
உங்கள் பிடிவாதப் போக்கை கொஞ்சம் மாற்றிக் கொள்வீர்கள். உங்களால் பயனடைந்தவர்கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள். வியாபாரம் சூடு பிடிக்கும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**மிதுனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். உத்தியோகத்தில் சில சூட்சுமங்களை கற்றுக் கொள்வீர்கள். தடைகள் ஏற்படும்.

**கடகம்**
பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரிகள் உங்களுக்கு ஒத்துழைப்பார். எதிர்பாராத வெற்றி கிடைக்கும்.

**சிம்மம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர், நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். உத்தியோகத்தில் உங்களின் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். தொட்டது துலங்கும்.

**கன்னி**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். வியாபாரத்தில் ஊழியர்களிடம் கனிவாக நடந்து கொள்ளுங்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவார்கள்.

**துலாம்**
தடைகளை கண்டு தளர மாட்டீர்கள். தாய்வழி உறவினர்களுடன் மனஸ்தாபம் வந்து நீங்கும். புது வேலை கிடைக்கும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். உழைப்பால் உயரும்.

**விருட்சிகம்**
குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். வெளி வட்டாரத்தில் அந்தஸ்து உயரும். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**தனுசு**
கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். அழகும் இளமையும் கூடும். நண்பர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**மகரம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கடந்த காலத்தில் கிடைத்த நல்ல வாய்ப்புகளையெல்லாம் சரியாக பயன்படுத்தாமல் விட்டு விட்டோமே என்றெல்லாம் வருந்துவீர்கள். எதிர்ப்புகள் அதிகரிக்கும் நாள்.

**கும்பம்**
கணவன் - மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. யாருக்கும் பரிந்துரை செய்ய வேண்டாம். வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும். எதிர்ப்புகள் வந்து போகும். எதிலும் பொறுமைத் தேவைப்படும்.

**மீனம்**
திட்டமிட்ட காரியங்கள் கைகூடும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் லாபமடைவீர்கள். நீங்கள் மதிக்கப்படுவீர்கள். சக ஊழியர்கள் உங்களுக்கு உதவுவார்கள்.

# இலங்கை - இந்திய மீனவர் இணைந்த செயல்குழுவை மீண்டும் உருவாக்குக

## முதலமைச்சர் ஸ்டாலின் வலியுறுத்து

சென்னை, ஜூன் 26

இலங்கை, இந்திய மீனவர்கள் தொடர்பான இணைந்த செயல்குழுவை மீண்டும் உருவாக்க வேண்டும் என தமிழக முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

அண்மையில், 22 தமிழக மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன் பிடித்தமைக்காக கைது செய்யப்பட்டனர்.

அவர்களையும் ஏற்கனவே கைதானவர்களையும் விடுவிக்க வலியுறுத்தி, மு. க. ஸ்டாலின் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இந்த கடிதத்தில் தொடர்ச்சியாக தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவதால் அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது.

இதனால் இந்தப் பிரச்னைக்கு உடனடியாகத் தீர்வு காணப்பட வேண்டும். இந்தப் பிரச்னையை தீர்ப்பதற்காக உருவாக்கப்பட்ட இணைந்த செயல்குழுவை மீண்டும் புதுப்பிக்க வேண்டும் என்றும் தமிழக முதலமைச்சர் வலியுறுத்தியுள்ளார். (ஐ)

# தமிழுக்கு தொண்டாற்றுவோருக்கு கருணாநிதி பெயரில் புதிய விருது

சென்னை, ஜூன் 26

தமிழ் மொழிக்கு தொண்டு செய்வோருக்கு கருணாநிதி பெயரில் 10 இலட்சம் (இந்திய) ரூபாய், ஒரு பவுண் தங்கப் பதக்கத்துடன் புதிய விருது வழங்கப்படும் என்று சட்டப்பேரவையில் அமைச்சர் மு. பெ. சாமிநாதன் அறிவித்தார்.

தமிழக சட்டப்பேரவையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை தொடர்பாக அத்துறையின் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பதிலளித்து பேசும்போதே அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

தமிழ் மொழிக்கு செம்மொழித் தகுதி பெற்றுத்தந்த முன்னாள் முதல்வர் கருணாநிதியின் பிறந்த நாளான ஜூன் 3ஆம் திகதி செம்மொழிநாள் விழாவாக தமிழ்நாடு அரசு சார்பில் ஆண்டுதோறும் கொண்டாடப்படும்.

சிறந்த நூல்களை எழுதும் நூலாசிரியருக்கான பரிசுத் தொகை ரூ.50 ஆயிரம் ரூபாயாகவும் சிறந்த பதிப்பகத்தாருக்கான பரிசுத்தொகை 25 ஆயிரம் ரூபாயாகவும் உயர்த்தப்படும் என்றார். தமிழுக்கு தொண்டாற்றுவோருக்கு கருணாநிதி பெயரில் ரூ.10 இலட்சம், ஒரு பவுண் தங்கப்பதக்கத்துடன் புதிய விருது வழங்கப்படும் - என்றார். (ஐ)

# 4,000 ஆண்டுகள் பழமையான கற்கால ஆயுதம் கண்டெடுப்பு

சென்னை, ஜூன் 26

4 ஆயிரம் ஆண்டுகள் பழமையான புதிய கற்கால வெட்டும் கருவி கண்டறியப்பட்டுள்ளது என தொல்லியல் துறை அகழாய்வு இயக்குநர் பரந்தாமன் தெரிவித்தார்.

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை வட்டம் குன்னத்தூர் ஊராட்சிக்கு உட்பட்ட சென்னானூரில் இந்த ஆயுதம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த 6 நாட்களாக சென்னானூரில் அகழாய்வுப் பணி நடந்து வருகிறது. இதில், பி2 என்ற அகழாய்வுக் குழியில் 53 செ. மீ ஆழத்தில் உடைந்த நிலையில் புதிய கற்கால வெட்டுக்கருவி கிடைத்துள்ளது. இக்கருவி 6 செ.மீ நீளமும், 4 செ. மீ அகலமும் உள்ளது. இக்கருவி 4,000 ஆண்டுகள் பழமையானது.

புதிய கற்காலத்தில்தான் முதன்முதலில் விவசாயம் தொடங்கியது. அப்போது, 30 முதல் 25 செ.மீ நீளமுள்ள கற்கருவியைத்தான் விவசாய பணிக்குப் பயன்படுத்தினர். தற்போது, கண்டறியப்பட்டுள்ள இக்கருவி சிறியது என்பதால் மரங்கள் மற்றும் இறைச்சியை வெட்டவும், வேட்டையாடவும், கோடாரியைப் போல பயன்படுத்தியுள்ளனர் - என்று தொல்லியல்துறை இயக்குநர் கூறினார். (ஐ)

# கள்ளச்சாராய சம்பவத்தை சி. பி. ஐ. விசாரிக்க வேண்டும்!

## அ. தி. மு. க. ஆளுநரிடம் மனு

சென்னை, ஜூன் 26

கள்ளக்குறிச்சி கள்ளச் சாராய மரணம் தொடர்பாக நேர்மையான, நியாயமான விசாரணை நடைபெறுவதற்கு சி. பி. ஐ. விசாரணைக்கு பரிந்துரை செய்ய வேண்டும் என்று தமிழக ஆளுநரை சந்தித்து எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி மனு அளித்துள்ளார். அப்போது அ. தி. மு. க. சட்டமன்ற உறுப்பினர்கள் உடனிருந்தனர்.

பின்னர் ஆளுநர் மாளிகையில் இருந்து வெளியே வந்த பழனிசாமி கூறியதாவது:

கள்ளக்குறிச்சி கள்ளச் சாராய மரணம் குறித்து சி. பி. சி. ஐ. டி. விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. சி. பி. சி. ஐ. டி. இந்த வழக்கை விசாரித்தால் நேர்மையாகவும், நியாயமாகவும் விசாரிக்கப்பட மாட்டாது. மேலும், இவ்வழக்கில் உண்மைத் தன்மை வெளிவர வேண்டும் என்றால் சி. பி. ஐ. விசாரித்தால் மட்டுமே உண்மை வெளிவரும். இந்த சம்பவத்துக்கு பிறகு தமிழ்நாடு முழுவதும் பொலிஸார் கள்ளச்சாராய வேட்டை நடத்தி 800இற்கும் மேற்பட்டோரை கைது செய்துள்ளனர்.

மேலும் கள்ளச் சாராய வியாபாரிகளுடன் பொலிஸாருக்கு தொடர்பு இருப்பதால் மக்கள் ஏதாவது தகவல் தெரிவித்தால் அது உடனே கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களுக்கு சென்று விடுகிறது. இதனால் அவர்கள் மக்களை அச்சுறுத்துகின்றனர். அந்த பயத்தில் தான் கள்ளச்சார விற்பனை குறித்து பொலிஸாரிடம் தகவல் தெரிவிக்க மக்கள் அஞ்சுகின்றனர்.

இது போன்ற சூழலில் கள்ளச் சாராய மரணம் குறித்து நியாயமான நேர்மையான விசாரணை நடத்தப்பட்டு அதன் பின்புலத்தில் உள்ளவர்கள் பற்றிய தகவல்கள் வெளிவர வேண்டும் என்றால் வழக்கு சி. பி. ஐ. விசாரித்தாக வேண்டும். அதற்கு ஆளுநர் பரிந்துரை செய்ய வேண்டும் என்று ஆளுநரிடம் மனு கொடுத்தோம் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்ஷக்களால்தான் நாம் சுவாசிக்கின்றோம்

## மொட்டு கட்சி எம்.பி. பெருமிதம்

கொழும்பு, ஜூன் 26

**ராஜபக்ஷக்கள் இல்லாவிட்டால் இந்நாடு பிளவுபட்டு காசாவின் நிலையே எமக்கு ஏற்பட்டிருக்கும். எனவே, ராஜபக்சக்களை ஒருபோதும் மறக்க முடியாது. இது மக்களுக்கும் தெரியும் என்று பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.**



ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ஷக்களின் ஆதரவு தேவையில்லை என நிமல் லான்சா தரப்பு கூறியுள்ள நிலையிலேயே மொட்டு கட்சி எம்.பி. இவ்வாறு பதிலடி கொடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

ராஜபக்ஷக்களால்தான் நாம் சுவாசிக்கின்றோம். ராஜபக்சக்களால்தான் இந்நாடு பிளவுபடுவது தடுக்கப்பட்டது. ராஜபக்ஷக்கள் இல்லாவிட்டால் காஸாவின் நிலைதான் இங்கு ஏற்பட்டிருக்கும்.

ராஜபக்ஷக்களால்தான் நாடு அபிவிருத்தி அடைந்தது.

இன்று ராஜபக்ஷக்கள் விமர்சிப்பவர்கள் ராஜபக்ஷக்களின் புண்ணியத்தால் பாராளுமன்றம் வந்தவர்கள். அவர்கள் மறந்தாலும் ராஜபக்ஷக்களை எம்மால் மறக்க முடியாது. மொட்டு கட்சியின் ஆதரவு இன்றி எவராலும் ஆட்சி அமைக்க முடியாது.

ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் எமது கட்சி இன்னும் முடிவெடுக்கவில்லை. தற்போதைய ஜனாதிபதியுடன் ஒத்துழைப்புடன் செயற்படுகின்றோம். எனினும், கட்சி எடுக்கும் முடிவின் பிரகாரமே நாம் செயற்படுவோம்-என்றார். (அ)

# ஐஸ் போதைப்பொருள் விநியோகித்த பிரதான சந்தேக நபர் ஒருவர் கைது!

கொழும்பு, ஜூன் 26

தனமல்வில பிரதேசத்தில் ஐஸ் போதைப்பொருள் விநியோகித்த பிரதான சந்தேக நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தனமல்வில பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட யுக்திய நடவடிக்கையின் போது இவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரிடம் இருந்து 8 கிராம் 233 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளை பொலிஸ் அதிகாரிகள் கைப்பற்றினர்.

தனமல்வில பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர் வெல்லவாய நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார். (அ)

# விகாரைக்கு சென்று திரும்பியவரை தாக்கிக் கொன்றது காட்டு யானை!

கொழும்பு, ஜூன் 26

குருநாகல், அம்பன்பொல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பக்மீவெவ பகுதியில் காட்டு யானை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளதாக அம்பன்பொல பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பன்பொல, பக்மீவெவ பகுதியைச் சேர்ந்த 65 வயதுடைய நபரொருவரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் பக்மீவெவ பகுதியில் உள்ள விகாரையொன்றின் வழிபாடுகளில் கலந்து கொண்டு விட்டு பின்னர், மீண்டும் வீடு நோக்கி சென்றுகொண்டிருக்கும் போது காட்டு யானை தாக்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# வீழ்ச்சி அடையும் பணவீக்கம்!

கொழும்பு, ஜூன் 26

இலங்கை அரசு பணவீக்கத்தில் வீழ்ச்சி அடைந்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் தரவுகளின் அடிப்படையில், இலங்கையின் பணவீக்கம் ஏப்ரல் 2024 இல் 2.7 வீதம் காணப்பட்டதுடன், அது மே 2024 இல் 1.6 வீதமாகக் குறைந்துள்ளதாக மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் அறிவித்துள்ளது.

அத்துடன் உணவு வகையின் பணவீக்கம் ஏப்ரல் 2024 இல் 3.3 வீதமாக இருந்த நிலையில் அது மே 2024 இல் 0.5 வீதமாகக் குறைந்துள்ளது எனவும், 2024 ஏப்ரலில் 2.3 வீதமாக பதிவாகியிருந்த உணவு அல்லாத வகையின் பணவீக்கம் 2024 மே மாதத்தில் 2.4 வீதமாக சிறிதளவு அதிகரிப்பை பதிவு செய்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# விலங்குகள், விலங்கு சார்ந்த பொருட்களை இலங்கைக்கு இறக்குமதி செய்ய கட்டுப்பாடு

கொழும்பு, ஜூன் 26

பறவைக் காய்ச்சல் பதிவாகியுள்ள எந்தவொரு நாட்டிலிருந்தும் விலங்குகள் அல்லது விலங்கு சார்ந்த உற்பத்திப் பொருட்களை இலங்கைக்கு இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படமாட்டாது என கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை பல நாடுகளில் மீண்டும் தலைதூக்கியுள்ள பறவைக் காய்ச்சல் நோய்க்கிருமி நாட்டுக்குள் நுழைவதைத் தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்ந்தும் அமுல்படுத்தப்படும் எனவும் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஹேமாலி கொத்தலாவல தெரிவித்தார்.

அத்துடன் முதன்முறையாக அமெரிக்காவில் கால்நடைகளுக்கு இடையில் இந்த நோய் பதிவாகியமை மிகவும் ஆபத்தான நிலை என்றும் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், நாட்டில் நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம் மேலும் வலுப்படுத்தப்பட்டுள்ளதால் பறவைக் காய்ச்சல் குறித்து தேவையற்ற அச்சம் கொள்ள தேவையில்லை எனவும் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஹேமாலி கொத்தலாவல மேலும் கூறினார். (அ)

# மரக்கடத்தல் வாகனம் மீது பொலிஸ் துப்பாக்கிச் சூடு!

## 07 இலட்சம் ரூபா மதிப்புள்ள மரங்கள் கைப்பற்றப்பட்டன

வவுனியா, ஜூன் 26

வவுனியா, ஓமந்தைப் பகுதியில் மரக்கடத்தலில் ஈடுபட்ட வாகனம் மீது, துப்பாக்கிச் சூடு நடத்தி 07 இலட்சம் ரூபா பெறுமதியான மரங்களை கைப்பற்றியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா பிரதி பொலிஸ்மா அதிபர் சாமந்த விஜயசேகரவுக்கு கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மாலின் அஜந்த பெரேராவின் உத்தரவில், மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் அழகிய வண்ண தலைமையில் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினர், ஓமந்தை, பாலமோட்டைப் பகுதியில் விசேட கண்காணிப்பு நடவடிக்கை ஒன்றை முன்னெடுத்தனர்.

இதன்போது, மரங்களை ஏற்றிச்சென்ற பிக்கப் ரக வாகனம் பொலிஸாரை மோதித் தள்ளும் வகையில் செயற்பட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளது.

இதனையடுத்து பொலிஸார் குறித்த வாகனத்தை நோக்கி 05 முறை துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இதன்போது வாகனத்தை கைவிட்டு, மரங்களை கடத்திச் சென்றவர்கள் தப்பி ஓடியுள்ளனர்.

குறித்த வாகனத்தை கைப்பற்றிய பொலிஸார் அதில் இருந்து சுமார் 07 இலட்சம் ரூபா பெறுமதியான மரங்களை மீட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# வவுனியாவில் 3 வயதுச் சிறுமிக்கு பாலியல் தொல்லை; ஒருவர் கைது!

வவுனியா, ஜூன் 26

வவுனியாவில் 3 வயதுச் சிறுமிக்குப் பாலியல் தொல்லை கொடுத்த குற்றச்சாட்டில் நபரொருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த சிறுமியின் தாயார் வேலைக்குச் செல்லும்போது சிறுமியை தனது அயலவரது வீட்டில் விட்டுச் செல்வது வழமை எனவும், இவ்வாறு விட்டுச் செல்லும் சந்தர்ப்பங்களில் அயலவர் அச்சிறுமிக்கு பாலியல் தொல்லை தொடுத்து வந்துள்ளார் என்பதும் தெரிய வந்துள்ளது.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட சிறுமி மருத்துவ பரிசோதனைக்காக வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இது குறித்து சிறுமியின் தாயார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ள நிலையில், சந்தேக நபரைக் கைது செய்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பல்கலைக்கழகங்களை சுற்றியுள்ள பகுதிகளுக்கு பொலிஸ் பாதுகாப்பு!

கொழும்பு, ஜூன் 26

பல்கலைக்கழகங்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் பொலிஸாரை பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக ஊழியர்கள் மற்றும் மாணவர்களின் காப்பிற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்த ஆசிரியை கைது!

கொழும்பு, ஜூன் 26

போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டுவந்தார் எனக் கூறப்படும் அநுராதபுரம் பகுதியில் உள்ள அரச பாடசாலையொன்றின் ஆசிரியை கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த ஆசிரியை தனது கணவருடன் இணைந்து போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்துள்ளார் என தெரியவந்துள்ளது. விற்பனைக்காக வைத்திருந்த ஹெரோயினும் மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள ஆசிரியையும், அவரின் கணவரும் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் தடுத்துவைக்கப்பட்டு, விசாரிக்கப்பட்டு வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் அமைச்சர் பதவியை துறப்பேன்!

## அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ



கொழும்பு, ஜூன் 26

2024 ரி-20 உலகக் கிண்ண கிரிக்கட் போட்டிக்காக சென்ற இலங்கை கிரிக்கெட் அணி, ஒழுங்கீனமாக நடந்து கொண்டதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் அமைச்சர் பதவியை இராஜினாமா செய்வதாக சுற்றுலாத் துறை, காணி, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

விளையாட்டு வீரர்களின் நலனுக்காக அரசாங்கம் பாரிய செலவீனத்தை மேற்கொள்ளும் நிலையில், சர்வதேச அளவில் சாதனை படைத்த 60 விளையாட்டு வீரர்கள் தெரிவு செய்யப்பட்டு மாதாந்தம் தலா 50,000 ரூபா வழங்கப்பட்டுள்ளதுடன், மேலும் தெரிவு செய்யப்பட்ட 850 விளையாட்டு வீரர்களுக்கு மாதாந்தம் 10,000 ரூபா கொடுப்பனவு வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுதந்திர இலங்கையின் 75 வருட வரலாற்றில், மக்களுக்கு முழு உரிமையுள்ள காணி உரிமையை வழங்குவதற்கு ஜனாதிபதி ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட முதல் நடவடிக்கையாக "உறுமய" காணி உறுதிப்பத்திரம் வழங்கும் திட்டத்தைச் சுட்டிக்காட்ட முடியும். பெப்ரவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தில் இதுவரை 50,000 இற்கும் மேற்பட்டோருக்கு காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. உறுமய திட்டத்தின் மூலம் 20 இலட்சம் முழு உரிமையுள்ள காணி உறுதிகள் வழங்க எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் மக்களிடம் இது பற்றிய சரியான புரிதல் இல்லை என்று தெரிகிறது. அதனாலேயே இவர்களது மானியப் பத்திரங்களை பிரதேச செயலகத்தில் ஒப்படைத்து காணி உறுதிப் பத்திரங்களாக மாற்றும் செயற்பாடுகள் மந்தமான நிலையில் நடைபெறுகின்றன. இது குறித்து மக்களுக்கு தெளிவுபடுத்தும் வகையில் நடமாடும் சேவையை இந்த வாரம் முதல் ஆரம்பிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், பஸ்கள் மூலம் பிரதேச செயலக மட்டத்தில் மக்களுக்கு அறிவித்து உறுமய காணி உறுதிப்பத்திரங்கள் விநியோகத்தை துரிதப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் வடமேல் மாகாணத்தில் 12,000 காணி உறுதிப்பத்திரங்களும், மாத்தறை மாவட்டத்தில் 12,000 காணி உறுதிப்பத்திரங்களும் வழங்கும் பணிகள் அடுத்த சில தினங்களில் நிறைவடையும்.

சுற்றுலாத் துறையைப் பற்றி நாம் கூறினால், இந்த ஆண்டு 990,000 இற்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் எமது நாட்டிற்கு வருகை தந்துள்ளனர். இலவச விசா வழங்கும் முறை குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையும் விரைவில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட உள்ளது. அதன்பிறகு இலவச விசா வழங்கும் முறையை அமுல்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் மூலம் சுற்றுலாத்துறையின் விரைவான வளர்ச்சியை ஏற்படுத்த முடியும். சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் இதுவரை 05 உலகளாவிய விளம்பரத் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன. சீனா, ஜப்பான், இந்தியா மற்றும் ஐரோப்பாவிற்கு தனித்தனியான உலகளாவிய விளம்பர திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளன. சுற்றுலாப் பயணிகள் மத்தியில் இலங்கையை பிரபலப்படுத்த. "மஸ்ட் விசிட்" பெயரில் புதிய வேலைத்திட்டம் ஒன்றும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சுற்றுலா அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டு வரும் ஊக்குவிப்புத் திட்டங்களின் காரணமாக, உலகின் முதல் பத்து சுற்றுலாத் தலங்களுக்குள் இலங்கையையும் கொண்டு வர முடிந்துள்ளது. இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளில் 33% பேர் மீண்டும் இலங்கைக்கு வருகை தருகின்றனர். அந்தச் சூழல் சுற்றுலாத் துறையின் ஒரு நல்ல போக்காகும்.

எனவே, கடல்சார் சுற்றுலாத் துறையை மேம்படுத்தவும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதேநேரம் திருகோணமலை மற்றும் அறுகம்பே பகுதிகள் கடல்சார் சுற்றுலாத் துறையின் கேந்திர மையமாக மாற்றவும் திட்டமிடப்பட்டுள்ளது. சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் வகையில் விரைவில் உள்நாட்டு விமான சேவையொன்றை ஆரம்பிக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது-என்றார். (அ)



# கிளிநொச்சியில் கவனவீர்ப்பு!

கிளிநொச்சி, ஜூன் 26

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை நேற்று முன்னெடுத்தனர்.

இந்தப் போராட்டம் நேற்று காலை 10.00 மணியளவில் கந்தசுவாமி ஆலய முன்றலில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் "சர்வதேச விசாரணையை தேவை, இழப்பீடுகள் வேண்டாம், எமக்கு பிள்ளைகள் வேண்டும் போன்ற போன்ற கோசங்களையும் எழுப்பியும், பதாகைகளையும் ஏந்தியவாறு கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர். (அ)

# அரச நிறுவனங்களில் அறவிடவேண்டிய மீதி வரிப்பணத்தை அறவிட நடவடிக்கை



கொழும்பு, ஜூன் 26

அரச நிறுவனங்களில் அறவிடப்பட வேண்டிய மீதி வரிப்பணத்தை அறவிடுவதற்கு அவசியமான சகல நடவடிக்கைகளையும் எதிர்காலத்தில் எடுக்கவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உலகில் ஆகக் குறைந்த வருமானம் கிடைக்கப் பெற்றாலும் ஏதோ ஒரு இடத்துக்கு வந்து நாட்டைக் கொண்டு செல்கிறோம். அறவிடப்படவேண்டிய வற்றை அறவிடாது புதியவற்றை மேற்கொள்ள முயற்சிப்பதாக எதிர்க் கட்சியினர் தற்போது சொல்ல முயற்சிக்கின்றனர். அது ஒரு தர்க்கமாகும். ஆம், அறவிடப்படவேண்டிய மீதி வரித்தொகை அரசாங்கமாக தெளிவுபடுத்தவேண்டும்.

முதலாவதாக எமது நாட்டின் வரிச் சட்டத்தில் காணப்படும் மேன்முறையீட்டு உரிமை. அது முழு உலகத்திலும் உள்ளது. அரசாங்கத்தினால் குத்தகை செலுத்துமாறு குறிப்பிட்டால், சட்டத்தின் முன்னால் சென்று மேன்முறையீடு செய்ய அரசாங்கமாக இருந்தாலும் எங்களால் இதனை செலுத்த முடியாது என்று சட்டத்தால் நீதிமன்றத்திடம் செல்ல மக்களுக்கு உரிமை உள்ளது.

அவற்றில் உள்ளவை தான் தற்போது அதிகமாகக் காணப்படுகின்றது. இரண்டாவது அரசாங்க நிறுவனங்களினால் செலுத்தப்பட வேண்டிய வரி. எந்தவொரு மீதியாக வரியை அறவிடுவதற்கு அரசாங்கத்திற்குக் காணப்படும் சகல அதிகாரங்களும் இந்த யுகத்தைப் போல் இன்னொரு யுகம் இல்லை-என்றார். (அ)



# முட்டைகளை ஏற்றிச் சென்ற லொறி நிறுத்தப்பட்டிருந்த காருடன் மோதியது

கொழும்பு, ஜூன் 26

குருநாகல் பிரதேசத்தில் குளியாப்பிட்டிய-ஹெட்டிப்பொல வீதியில் லொறி ஒன்று வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

முட்டைகளை ஏற்றிச் சென்ற லொறி ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் ஒன்றின் பின்புறத்தில் மோதியதில் கார் முன்னோக்கிச் சென்று அருகிலிருந்த மின் கம்பத்தில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின்போது லொறியின் சாரதி படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

லொறியில் கொண்டு செல்லப்பட்ட பல முட்டைகள் உடைந்து நாசமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கல்விசாரா ஊழியர் பணிப்பகிஷ்கரிப்பு

கொழும்பு, ஜூன் 26

சம்பளம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளை முன்வைத்து பல்வேறு துறைசார் ஊழியர்களும் நேற்று தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டதாக கல்விசாரா ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களால் ஆரம்பிக்கப்பட்ட பணிப்பகிஷ்கரிப்பு போராட்டம் நேற்று 56ஆவது நாளாகவும் தொடர்கிறது.

பணிப்பகிஷ்கரிப்புடன் பல பல்கலைக்கழகங்களுக்கு முன்பாக சத்தியாகிரகப் போராட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களுக்கும் அரச சம்பளக் குழுவுக்கும் இடையில் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாக பல்கலைக்கழக தொழிற்சங்கங்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது. (அ)

# வாகனங்கள் இறக்குமதி அனுமதியில் பாரபட்சம்

## வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் அதிருப்தி

கொழும்பு, ஜூன் 26

தனிப்பட்ட இலாபத்திற்காக வாகன இறக்குமதி முறைமையை முன்னெடுக்கும் முயற்சிகளை காணக்கூடியதாக உள்ளதாக வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

சில தரப்பினரால் வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்படுதல் மற்றும் சில அமைச்சுகளுக்கு வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்படுவதன் காரணமாக தங்களுக்கு கடும் அநீதி இழைக்கப்படுவதாக அந்தச் சங்கத்தின் செயலாளர் அரோஷ றொட்ரிகோ தெரிவித்துள்ளார்.

வாகன இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்த வாய்ப்புள்ள போதிலும் அத்தகைய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மகிந்தவின் பதவியை பறிக்க ரணில் திட்டமா?

## ஆதரவளிக்க 43 பேர் தயார்

கொழும்பு, ஜூன் 26

**பொதுஜன பெரமுனவின் அமைச்சர்கள் மற்றும் எம்.பிக்கள் குழுவொன்று, அந்தக்கட்சியின் தலைமைப் பதவியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்க வேண்டுமென்ற நிலைப்பாட்டில் இருப்பதாக தெரியவருகிறது.**

தலைமைப் பதவிக்கு ரணில் விக்கிரமசிங்கவை போட்டியிடவைத்து இரகசியமாக ஆதரிக்கும் சில ஆலோசனைகள் நடத்தப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இவ்வாறு ஆதரவளிக்க உள்ள அமைச்சர்கள் மற்றும் எம்.பிக்களின் எண்ணிக்கை 43 வரை இருக்குமெனவும் கூறப்படுகிறது.

இவர்களில் மூன்று அமைச்சர்கள், 13 இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் 27 எம்.பிக்கள் உள்ளதாகவும் தெரியவருகிறது.

இந்த விடயத்தை அறிந்துள்ள கட்சியின் தலைவர் மகிந்த ராஜபக்ச மற்றும் கட்சியின் முன்னாள் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ச ஆகியோர் கடும் அதிருப்தியில் இருப்பதாகவும் இவ்வாறான ஆலோசனைகளை வழங்கியது யாரென விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் கட்சியின் வட்டாரங்களில் பேசப்படுகிறது. (அ)

# எந்தவொரு சவாலையும் எதிர்கொள்ளத் தயார்!

## சரத் பொன்சேகா அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 26

இலங்கையின் சார்பாக எந்தவொரு சவாலையும் எதிர்கொள்ளத் தயார் என முன்னாள் இராணுவத் தளபதியும் பாராளுமன்ற உறுப்பினருமான சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

பொன்சேகாவுக்கு எதிராக அவரது கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க தயாராகி வரும் நிலையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"இலங்கை சரியான அரசியல் திசையில் முன்னேற வேண்டிய நேரம் வந்துவிட்டது, எங்கள் தாய்நாட்டின் சார்பாக நான் எந்த சவாலையும் எதிர்கொள்ளத் தயாராக இருக்கிறேன்" என்று அவர் தனது எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இன்னும் சில மாதங்களில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளதாகவும், ஊழலை அம்பலப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுப்பதற்கும் அரசியல் விருப்பம் உள்ள ஒரு தலைவரை தெரிவு செய்ய வேண்டிய தருணம் வந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

"இதுவரை எந்தத் தலைவரும் அப்படிச் செய்ததில்லை. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அவ்வாறானதொரு தலைவரை தெரிவு செய்வதற்கான சந்தர்ப்பம் மக்களுக்கு அமையும்"என நான் நம்புகின்றேன் என அவர் தெரிவித்துள்ளார்.

# இலங்கை நிர்வாக சேவை சங்கத்தின் போராட்டம் தற்காலிகமாக நிறுத்தம்

கொழும்பு, ஜூன் 26

பிரதமருடனான கலந்துரையாடலின் பின்னர் தமது தொழிற்சங்க நடவடிக்கையை தற்காலிகமாக நிறுத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக இலங்கை நிர்வாக சேவைகள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்கு இணக்கம் காணப்பட்டதாக சங்கத்தின் தலைவர் மகேஷ் கம்மன்பில தெரிவித்துள்ளார்.

சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து இலங்கை நிர்வாக சேவை சங்கம் சுகயீன விடுமுறையை அறிவித்து பணிப்புறக்கணிப்பில் ஈடுபட தீர்மானித்திருந்தது.

இது தொடர்பான கோரிக்கைகள் தொடர்பில் பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கு இடையில் நேற்று முன் தினம் பிற்பகல் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலின் போது இணக்கப்பாட்டுக்கு வர முடிந்ததால், தமது தொழிற்சங்க நடவடிக்கையை தற்காலிகமாக நிறுத்த தீர்மானித்ததாக இலங்கை நிர்வாக சேவைகள் சங்கத்தின் தலைவர் மகேஷ் கம்மன்பில தெரிவித்தார்.

பிரதமருடனான கலந்துரையாடலில் நிறைவேற்று அதிகாரிகள் சங்கத்தின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டபோதிலும் தமது கோரிக்கைகளுக்கு நல்ல பதில் கிடைக்கவில்லை என அரசாங்க நிறைவேற்று அதிகாரிகளின் கூட்டுக் குழுவின் தலைவர் எச்.ஏ.எல்.உதயசிறி தெரிவித்தார். (அ)

# சுதந்திர கட்சியைச் சீரழிப்பவர்களின் சதித்திட்டத்தை அம்பலப்படுத்துவேன்

## அமைச்சர் விஜேதாச அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 26

சுதந்திர கட்சி இம்முறை ஜனாதிபதித் தேர்தலுக்காக புதிய சின்னத்தை அறிமுகப்படுத்தும். சுதந்திர கட்சியை சீரழிப்பவர்களின் சதித்திட்டங்களை விரைவில் அம்பலப்படுத்துவேன். நான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு நிச்சயம் வெற்றி பெறுவேன் என நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

கண்டியில் சுதந்திர கட்சி தொகுதி அமைப்பாளர்களுடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

1994ஆம் ஆண்டு முதல் சுதந்திர கட்சியின் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டே ஒவ்வொரு தேர்தலிலும் ஆட்சியமைக்கும் தரப்பு வெற்றிப் பெற்றுள்ளது. இந்த காலப்பகுதியில் இடம்பெற்ற 6 தேர்தல்களிலும் கதிரை, வெற்றிலை, அன்னம் மற்றும் மொட்டு சின்னங்களில் சுதந்திரக் கட்சி போட்டியிட்டுள்ளது. அதே போன்று இம்முறை தேர்தலில் புதிய சின்னத்தை அறிமுகப்படுத்துவோம்.

கட்சி யாப்பிற்கமைய நானே தலைவர். எனினும் நீதிமன்றம் இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்துள்ளமையால் தற்காலிகமாக நான் அந்தப் பதவியில் செயற்படவில்லை. வரும் தினங்களில் நீதிமன்றத்தினால் பொருத்தமான தீர்ப்பு வழங்கப்படும். எமது அரசியலமைப்பிற்கேற்ப தகுதியான எவரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியும். அதுவே ஜனநாயகமாகும்.

சுதந்திர கட்சியைச் சீரழிப்பவர்களின் சதித்திட்டங்களை விரைவில் அம்பலப்படுத்துவேன். அதற்கான நேரம் இதுவல்ல. பொறுத்தமான நேரத்தில் அனைத்தையும் பகிரங்கப்படுத்துவேன். நான் நிச்சயம் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவேன். வெற்றி பெறுவேன். எமது வெற்றியின் பின்னர் எனக்கெதிரான அனைத்து வழக்குகளும் அரசியலமைப்பிற்கமைய செயலிழக்கும்-என்றார். (அ)

# கண்டி, பேராதனை வைத்தியசாலைகளில் சத்திர சிகிச்சைகள் இடைநிறுத்தப்பட்டன

## நோயாளர்கள் பெரும் சிரமத்தில்

கொழும்பு, ஜூன் 26

கண்டி தேசிய வைத்தியசாலை மற்றும் பேராதனை சிறுவர் வைத்தியசாலைகளில் சத்திர சிகிச்சைக்காக பயன்படுத்தப்படும் லிக்னோகேன் என்ற தடுப்பூசிக்கு பல மாதங்களாக கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

உள்ளூர் மயக்க மருந்துகளில் பயன்படுத்தப்படும் அந்த தடுப்பூசி பற்றாக்குறையால், கண்டி தேசிய வைத்தியசாலையில் பல்வேறு சிகிச்சைகளை மேற்கொள்வதில் வைத்தியர்கள் மற்றும் வைத்தியசாலை ஊழியர்கள் மிகவும் சிரமப்படுகின்றனர் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும், பேராதனை சிறுவர் வைத்தியசாலையில் குறித்த லிக்னோகேன் தடுப்பூசி கிடைக்காததால் சிறு குழந்தைகளின் சத்திரசிகிச்சைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

தடுப்பு மருந்து தட்டுப்பாடு குறித்து வைத்தியசாலைகளின் கட்டுப்பாட்டு அதிகாரசபை கொழும்பு சுகாதார அமைச்சுக்கு அறிவித்துள்ள போதிலும், தடுப்பூசி விநியோகம் இதுவரையில் இடம்பெறவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அவ்வப்போது சில மருந்துகளில் தட்டுப்பாடு நிலவினாலும் கூட அத்தியாவசியமான சந்தர்ப்பங்களில் அவசர கொள்வனவுகளின் கீழ் பெற்று நோயாளரின் சிகிச்சைகளை வழங்குவதாக கண்டி தேசிய வைத்தியசாலை மற்றும் பேராதனை வைத்தியசாலைகளின் மருந்துப் பற்றாக்குறை தொடர்பில் அந்த வைத்தியசாலைகளின் சிரேஷ்ட பேச்சாளர்கள் இருவர் தெரிவித்தனர்.

குறித்த லிக்னோகேன் வகையான மயக்க மருந்துகளும் அவ்வப்போது அவசரகால கொள்வனவுகளின் கீழ் பெறப்படுவதாகவும் வைத்தியசாலைப் பேச்சாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். (அ)

# அதிகாரிகளுக்கு இலட்சக்கணக்கில் வழங்கப்பட்ட மேலதிக கொடுப்பனவு

கொழும்பு, ஜூன் 26

லங்கா சதொச லிமிடெட் நிறுவனம் கடந்த 2022 ஆம் ஆண்டில் தனது பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு மாதாந்தக் கொடுப்பனவாக 8 இலட்சத்து 46 ஆயிரத்து 660 ரூபாவையும் எட்டு பிரதி அதிகாரிகளுக்கு 31 இலட்சத்து 55ஆயிரம் ரூபாவையும் செலுத்தியுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளியிட்டுள்ள கணக்காய்வு அறிக்கையில் தெரியவந்துள்ளது.

தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் பிரதி பொது மேலாளர்களுக்கு வழங்கப்படும் மாதாந்த கொடுப்பனவு முறையை ரூ. 95 ஆயிரம் மற்றும் 90ஆயிரமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதோடு, பணிப்பாளர் குழுவின் ஒப்புதலின் பேரில் 2022 ஆம் ஆண்டு மாதாந்த கொடுப்பனவாக இரண்டரை இலட்சம் ரூபா பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு வழங்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

அத்துடன் பிரதிப் பொது முகாமையாளர் பதவிகளுக்கு பணிப்பாளர் சபையின் அனுமதியின்றி மாதாந்தம் ஒன்றரை இலட்சம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதாக உரிய கணக்காய்வு அறிக்கைகள் மூலம் தெரியவந்துள்ளது.

சதொச நிறுவனம் 11 அதிகாரிகளுக்கு 4 இலட்சத்து 87ஆயிரத்து500 ரூபா வீதம் போக்குவரத்துக் கொடுப்பனவை செலுத்தியுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (அ)

# காலியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை

கொழும்பு, ஜூன் 26

காலி பிரதேசத்தில் யக்கல முல்ல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பொல்பகொட பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக யக்கலமுல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று முன் தினம் திங்கட்கிழமை இரவு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

யக்கலமுல்ல, பொல்பகொட பகுதியைச் சேர்ந்த 51 வயது [illegible] கொலை செய்யப்பட்டுள்ளார்.

இவர் தனது வீட்டில் தனியாக வசித்து வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் தொடர்பில் எந்தவித தகவலும் இதுவரை கண்டறியப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50 நாட்களில் பொத்துவிலை அடைந்த பாதயாத்திரிகர்கள்!

**நாளை மறுநாள் உகந்தைமலையை அடைவர்**

காரைதீவு, ஜுன் 26

**யாழ்ப்பாணம் தொண்டமானாறு செல்வச்சந்நிதி - கதிர்காமம் பாதயாத்திரை குழுவினர் 50 ஆவது நாளில் பொத்துவிலை அடைந்துள்ளனர்.**



யாழ்ப்பாணம் செல்வச் சந்நதி ஆலயத்திலிருந்து கடந்த மே மாதம் 11 ஆம் திகதி புறப்பட்ட ஜெயாவேல்சாமி தலைமையிலான கதிர்காம பாதயாத்திரை குழுவினர் கடந்த 50 நாட்களாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய ஐந்து மாவட்டங்களைக் கடந்து கடந்த 15ஆம் திகதி சனிக்கிழமை ஆறாவது மாவட்டமான அம்பாறை மாவட்டத்திற்குள் பிரவேசித்தார்கள்.

இன்று பொத்துவிலை அடைந்த குழுவினர் பாணமையை அடைந்து சன்னியாசி மலையில் தங்குவர்.

நாளை வியாழக்கிழமை உகந்தை மலையை அடைய இருக்கின்றார்கள். 30ஆம் திகதி காட்டுப்பாதை திறக்கப்பட்டதும் முதல் நாள் காட்டுக்குள் பிரவேசிக்க இருக்கின்றார்கள்.

(அ)



## கைகழுவும் வாரத்தை முன்னிட்டு விழிப்புணர்வு நிகழ்வு காரைதீவில்

காரைதீவு, ஜுன் 26

கல்முனை பிராந்திய சுகாதார பணிமனையினால் ஜுன் 24 முதல் 29 வரை கை கழுவு தலை ஊக்கவிக்கும் வாரமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

காரைதீவு சுகாதார வைத்திய அலுவலகத்தால் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஊழியர்களுக்கு கைகளுவுகல் விழிப்புணர்வு மற்றும் முறையான கை கழுவும் முறை தொடர்பான செயன்முறை பயிற்சியும் வழங்கப்பட்டது.

இந் நிகழ்வில் சுகதார வைத்திய அதிகாரி தஸ்லிமாபஷீர், மேற்பார்வை பொதுசுகாதார பரிசோதகர், பொதுசுகாதார பரிசோதகர்கள் கலந்து கொண்டனர்.

(அ)

## பாலமுனை மரண உபகார நிலையத்துக்கு விஜயம் செய்தார் முன்னாள் முதல்வர்




கல்முனை, ஜுன் 26

பாலமுனை மரண உபகார நிதியத்திற்கு முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் சர்வதேச விவகாரங்கள் பணிப்பாளரும், கல்முனை மாநகர சபையின் முன்னாள் முதல்வருமான கலாநிதி சிராஸ் மீராசாஹிப் விஜயம் செய்துள்ளார்.

மரண உபகார நிதியத்தின் நிருவாக சபை உறுப்பினர்களின் அழைப்பையேற்று விஜயம் செய்த சிராஸ் மீராசாஹிப் நிதியத்தினுடாக கடந்த காலங்களில் இப்பிராந்தியத்தில் செய்யப்பட்ட பல்வேறு சமூக சேவைகள் மற்றும் சமூக செயற்பாடுகளை பார்வையிட்டதுடன் எதிர் காலத்தில் நிதியத்திற்கு தேவையான உதவிகளை செய்து தருவதாகவும் கூறினார்.

கல்முனை மாநகர சபையின் முதல்வராக அவர் பதவி வகித்த காலங்களில் அப்பிராந்தியங்களில் செய்த சேவையை பாராட்டி நினைவுச் சின்னமும் வழங்கி வைக்கப்பட்டது.

(அ)

# சமூக சேவைகளை முன்னெடுக்கும் அமைப்புகள் பாராட்டி கௌரவிப்பு

அம்பாறை, ஜுன் 26

நிந்தவூர் ரோஸ் றீனா நிறுவனத்தின் சமூக சேவைப்பிரிவின் ஏற்பாட்டில் சமூக நலன்புரி அமைப்புக்களின் ஊடாக அர்ப்பணிப்பு மிக்க சேவைகளை சமூகத்திற்காக முன்னெடுத்த நலன்புரி அமைப்புக்களை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு நிந்தவூர் அழகாபுரி தனியார் விடுதியில் இடம்பெற்றது.

ரோஸ் றீனா சமூக சேவைகள் அமைப்பின் ஸ்தாபகரும், முகாமைத்துவப் பணிப்பாளரும், சமூக ஆர்வலருமான ஏ.ஜே.ஜனுபர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முன்னாள் இராஜாங்க அமைச்சின் செயலாளரும், தேசிய எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் உறுப்பினரும், சம்மாந்துறை மஜ்லிஸ் சூரா அமைப்பின் தலைவருமான எம்.ஐ.அமீர் (நழிமி) பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்.



நிந்தவூர் மற்றும் சாய்ந்தமருது பிரதேச செயலாளர்களான ஏ.எம்.அப்துல் லத்திப், எம்.எம்.ஆசிக் மற்றும் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை மற்றும் நிந்தவூர் ஆதார வைத்தியசாலை ஆகியவற்றின் வைத்திய அத்தியட்சகர்களான டொக்டர் ஏ.எல்.எப்.ரஹ்மான், டொக்டர் எம்.பீ.ஏ.அப்துல் வாஜித், நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே.எல்.எம்.ரயிஸ், கல்முனை உதவிக் கல்விப் பணிப்பாளரும் நிந்தவூர் ஜும்மா பள்ளிவாசல் தலைவருமான எம்.ஏ.எம்.றசீன் ஆகியோர் இந்நிகழ்வில் சிறப்பு அதிதிகளாகவும் கலந்துகொண்டனர்.

இவ்வமைப்பினால் முதற்கட்டமாக அம்பாறை மாவட்டத்தில் அர்ப்பணிப்பு மிக்க சமூக சேவைகளை முன்னெடுத்த நலன்புரி அமைப்புக்கள், சமூக சேவையாளர்கள் பாராட்டி நினைவு சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

(அ)

## கிழக்கு மாகாண ஏழு துறைகளுக்கான அமைச்சின் செயலாளராக கலாநிதி கோபாலரத்தினம் நியமனம்!

திருமலை, ஜுன் 26

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மோட்டார் வாகன போக்குவரத்து, கட்டடங்கள் நிர்மாணம், வீடமைப்பு, கிராமிய மின் இணைப்பு, நீர் விநியோகம் ஆகிய ஏழு துறைகளுக்கான அமைச்சின் செயலாளராக. கலாநிதி மூ.கோபாலரத்தினம் (மூகோ) நியமிக்கப்பட்டுள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநர் எம்.செந்தில் தொண்டமான் இந்த நியமனத்தை நேற்று முன் தினம் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது அலுவலகத்தில் வைத்து வழங்கியுள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் ஆளுநர் மேற்கொண்ட அதிரடி உயர் நிர்வாக மாற்றத்தில் ஓரங்கமாக இவரது நியமனம் இடம்பெற்றுள்ளது.



ஏனைய செயலாளர்களுக்கும் நியமனக் கடிதங்களை ஆளுநர் வழங்கினார்.

இலங்கை நிர்வாக சேவை விசேட தர அதிகாரியான இவர், ஏலவே கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி காணி அபிவிருத்தி திறன் விருத்தி மகளிர் அபிவிருத்தி நீர் விநியோக துறை அமைச்சின் செயலாளராக பணியாற்றி வந்தார்.

(அ)

## சாய்ந்தமருது ஹிஜ்ரா பள்ளிவாசல் மதரஸாவில் ஹிப்ளு பிரிவு ஆரம்பம்

காரைதீவு, ஜுன் 26

சாய்ந்தமருது பொலிவேரியன் ஹிஜ்ரா பள்ளிவாசலில் இயங்கி வருகின்ற அல்குர்ஆன் மதரஸாவில் குர்ஆனை மனனமிடும் ஹிப்ளு மற்றும் ஷரீஆ பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முன் தினம் திங்கட்கிழமை பள்ளிவாசல் நிர்வாக சபைத் தலைவரும் முன்னாள் பிரதேச செயலாளருமான ஏ.எல்.எம். சலீம் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது இந்த மதரஸாவில் இணைந்து கொண்ட மாணவர்களின் பெற்றோர்களிடம் விண்ணப்பம் மற்றும் ஆவணங்கள் கையளிக்கப்பட்டன.


இந்த நிகழ்வில் பள்ளிவாசல் இமாம் மற்றும் நிருவாக சபை உறுப்பபினர்களும் நலன் விரும்பிகளும் பங்கேற்றிருந்தனர்.

இங்கு அல்குர்ஆனை பார்த்து ஓதுதலுக்கு மேலதிகமாக அல்குர்ஆனை மனனமிடுதல் மற்றும் ஷரீஆ வகுப்புக்களும் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

ஹிஜ்ரா பள்ளிவாசலானது கடந்த 2004ஆம் ஆண்டு இடம்பெற்ற சுனாமி அனர்த்தத்தினால் சாய்ந்தமருது மற்றும் மாளிகைக்காடு பிரதேசங்களில் காவு கொள்ளப்பட்டு உயிர் நீத்த சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்ட சுகதாக்களின் நினைவாக உருவாக்கப்பட்ட சுனாமி மீள்குடியேற்ற கிராமமான பொலிவேரியன் கிராமத்தில் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜூலியன் அசாஞ்சே விடுதலையானார்!

## அமெரிக்க நீதிமன்றில் குற்றங்களை ஏற்பார்!

லண்டன், ஜூன் 26

விக்கிலீக்ஸ் நிறுவுநர் ஜூலியன் அசாஞ்சே பிரிட்டன் சிறையிலிருந்து விடுதலையானார்.

இது தொடர்பாக திங்கட்கிழமை இரவு வெளியிடப்பட்ட நீதிமன்ற ஆவணங்களின்படி, தனது விடுதலைக்கு ஈடாக இராணுவ இரகசியங்களை வெளிப்படுத்தியதற்காக அமெரிக்க நீதிமன்றத்தில் குற்றத்தை ஒப்புக்கொள்ள அசாஞ்சே ஒப்புக்கொண்டார்.

இதனையடுத்து சிறையிலிருந்து அவர் விடுதலையானார். அவர் இந்த வார இறுதியில் அமெரிக்காவின் மரியானா தீவுகளில் உள்ள பெடரல் நீதிமன்றத்தில் முற்படுவார். அங்கே அவர் அமெரிக்க இராணுவ இரகசியங்களை வெளிப்படுத்திய குற்றங்களை ஒப்புக் கொள்கிறார்.

அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த செய்தியாளரான ஜூலியன் அசாஞ்சே கடந்த 2006ஆம் ஆண்டில் விக்கிலீக்ஸ் என்ற இணைய தளத்தை தொடங்கினார். கடந்த 2010இல் ஆப்கானிஸ்தான், ஈராக் போர் தொடர்பான ரகசிய ஆவணங்கள் இந்த இணையதளத்தில் வெளியாகின. இதில் அமெரிக்க இராணுவத்தின் பல்வேறு இரகசியங்கள் அம்பலப்படுத்தப்பட்டன.

பாலியல் வன்புணர்வில் ஈடுபட்டார் என்று அவரை கைது செய்ய 2010 நவம்பரில் சுவீடன் நீதிமன்று பிடியாணை பிறப்பித்தது. கைதிலிருந்து தப்ப அவர், 2012இல் லண்டனில் உள்ள ஈகுவடார் தூதரகத்தில் அவர் தஞ்சமடைந்தார். 2019இல் அவருக்கு அளித்த அடைக்கலத்தை ஈக்குவடோர் மீளப்பெற்றது. இதையடுத்து அவரை பிரிட்டன் பொலிஸார் கைது செய்தனர். கடந்த 5 ஆண்டுகளாக அவர் சிறையிலிருந்தார்.

அமெரிக்காவை உளவு பார்த்தது, இராணுவ ரகசியங்களை திருடியது உட்பட 17 குற்றச்சாட்டுகளை அசாஞ்சே மீது அந்த நாட்டு அரசு சுமத்தி உள்ளது. அமெரிக்காவின் கோரிக்கையை ஏற்று அவரை நாடு கடத்த பிரிட்டிஷ் உள்துறை அமைச்சகம் கடந்த 2022 ஜூனில் ஒப்புதல் அளித்தது.

ஜூலியன் அசாஞ்சே அமெரிக்காவுக்கு நாடு கடத்தப்பட்டால் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்படாது என்று அந்த நாட்டு அரசு உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்று அவர் தரப்பில் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வந்தது. இந்நிலையில், ஜூலியன் அசாஞ்சே பிரிட்டன் சிறையிலிருந்து விடுதலையானார். (ஐ)

# வலதுசாரி, இடதுசாரி போட்டியால் பிரான்ஸில் போர் வெடிக்கக்கூடும்!

## ஜனாதிபதி மக்ரோன் எச்சரிக்கை



பாரிஸ், ஜூன் 26

பிரான்ஸில் தீவிர வலதுசாரிகளுக்கும் தீவிர இடதுசாரிகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள போட்டி உள்நாட்டுப் போர் ஏற்பட வழிவகுக்கும் என்று அந்த நாட்டின் ஜனாதிபதி மக்ரோன் தெரிவித்துள்ளார்.

உலகின் புவிசார் அரசியல் போர் மற்றும் குழப்பங்களால் பதற்றத்தில் உள்ள ஐரோப்பாவில் பிரான்ஸ் ஜனாதிபதியின் இந்தக் கருத்து அங்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதனிடையே, பாராளுமன்றத்தை கலைத்து அவசர தேர்தலை நடத்த அவர் அழைப்பு விடுத்துள்ளார். முன்னதாக நடந்த ஐரோப்பிய ஒன்றியத் தேர்தலில் பிரான்ஸில் இடதுசாரிகள் வென்றமை வலதுசாரிகளுக்கு பலத்த அடியாக மாறியது. இதையடுத்தே ஜனாதிபதி பாராளுமன்றத்தை கலைத்தார் என்று கூறப்படுகின்றது.

இதன்படி, எதிர்வரும் 30ஆம் திகதி தொடக்கம் ஜூலை 7ஆம் திகதி வரை பிரான்ஸில் தேர்தல் நடைபெறும். இதில், வலதுசாரியான நஷனல் ரேலி கட்சிக்கும் இடதுசாரியான நியூ பொப்புலர் முன்னணி கூட்டணிக்கும் இடையே கடும் போட்டி நிலவும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த நிலையில் இரு கட்சிகளும் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றன. இதனிடையே, நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பு ஒன்றில், வலதுசாரிகளுக்கே பெரும்பான்மை கிடைக்கும் என்று கூறப்பட்டது. இதைத் தொடர்ந்து, ஆயிரக்கணக்கான பெண்கள் கூடி வலதுசாரிகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

இந்த நிலையிலேயே, நிகழ்வு ஒன்றில் பங்கேற்று பேசிய ஜனாதிபதி இமானுவல் மக்ரோன், தீவிர வலதுசாரிகளுக்கும் தீவிர இடதுசாரிகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள போட்டி உள்நாட்டுப் போர் ஏற்பட வழிவகுக்கும்.

இரண்டு பிரிவினரிடையேயும் கருத்து மோதல் வெறுப்பாக வளர்வதால் இந்த உள்நாட்டு போர் ஏற்படும் என்று மக்ரோன் எச்சரித்தார்.

# மத நிந்தனை செய்தவரை கொலை செய்த சிறுவன்!




பஞ்சாப், ஜூன் 26

பாகிஸ்தான் நாட்டின் பஞ்சாப் மாகாணத்தில் முஸ்லிம் மதத்தை நிந்தனை செய்தார் என்று 55 வயது நபரை 14 வயது சிறுவன் ஒருவர் கொலை செய்தார். இது அந்த நாட்டில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. கொல்லப்பட்டவர் 55 வயதான நசீர் ஹூசைன் ஷா. அவர் ஷியா என்ற இஸ்லாமிய பிரிவை சேர்ந்தவர். அந்த நாட்டில் இந்த பிரிவு சிறுபான்மையினர் பட்டியலில் உள்ளது.

கொலை செய்த 14 வயது சிறுவனின் தந்தை, அந்தப் பகுதியில் உள்ள சன்னி பிரிவு மக்கள் வழிபடும் மசூதியில் வழிபாடு சார்ந்த முக்கிய பொறுப்பில் இருந்துள்ளார். இந்த சூழலில் சிறுவனின் தந்தை மற்றும் அவரது உறவினரிடம் நபிகள் நாயகத்தின் தோழர்களை இழிவு செய்யும் வகையில் நசீர் ஹூசைன் ஷா பேசி வந்துள்ளார்.

இது அந்த சிறுவனுக்கு தெரியவந்துள்ளது. இதையடுத்து ஞாயிற்றுக்கிழமை மதியம் வீட்டில் இருந்த கத்தியை எடுத்துச் சென்று, நசீர் ஹூசைன் ஷாவை பலமுறை குத்தியுள்ளார். இதில் சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்தார். அதன் பின்னர் அந்த இடத்தில் இருந்து சிறுவன் தப்பிச் சென்றுள்ளார். அவரை பிடிக்க பாகிஸ்தான் பொலிஸ் சிறப்பு குழுவை அமைத்துள்ளது. (ஐ)

# எமனாக மாறிய அதிர்ஷ்டம்

சிங்கப்பூர், ஜூன் 26

சிங்கப்பூரில் உள்ள கசினோ ஒன்றில் 40 இலட்சம் டொலர்களை (122 கோடி இலங்கை ரூபாய்) வென்ற நபர் ஒருவர் இன்ப அதிர்ச்சியில் வெற்றி பெற்ற சிறிது நேரத்திலேயே மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்த நிகழ்வு சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

சிங்கப்பூரில் புகழ் பெற்று விளங்கும் மரினா பே சாண்ட்ஸ் கசினோவில் விளையாடிய அந்த நபர் 40 இலட்சம் டொலர்களை வென்றுள்ளார்.

இதனால் இன்ப அதிர்ச்சிக்கு ஆளான அவர் திடீரென சுருண்டு விழுந்தார். பதறிய கசினோ ஊழியர்கள் எவ்வளவோ முயன்றும் அவரைக் காப்பாற்ற முடியவில்லை. அவரது இறப்புக்கு அதீத அதிர்ச்சியால் மாரடைப்பு ஏற்பட்டதே காரணம் என்று பின்னர் தெரியவந்துள்ளது.

அதிர்ஷ்டம் எப்போதாவது சிலருக்கு மட்டுமே வரும் நிலையில் அப்படி ஏற்பட்ட அதிர்ஷ்டமே அந்த நபருக்கு எமனாக முடிந்தது என்பது அபத்தமான உண்மையாக மாறியுள்ளது.


# மூளையை கட்டுப்படுத்தும் சாதனம் லண்டன் சிறுவனுக்கு பொருத்தப்பட்டது

லண்டன், ஜூன் 26

தீவிர வலிப்பு நோயினால் பாதிக்கப்பட்ட சிறுவன் ஒருவனுக்கு, உலகில் முதன்முறையாக மூளையைக் கட்டுப்படுத்தும் மைக்ரோ சாதனம் வெற்றிகரமாகப் பொருத்தப்பட்டுள்ளது.

இங்கிலாந்தின் சமர்செட்டைச் சேர்ந்த, 13 வயதாகும் குறித்த சிறுவனுக்கு கடந்த ஆண்டு லண்டனில் சத்திர சிகிச்சை மேற்கொள் ளப்பட்டது.

சோதனை நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்ட இந்த சத்திர சிகிச்சையின் பின்னர், பகல் நேரத்தில் அவருக்கு ஏற்படுகின்ற வலிப்பு நோய்த் தாக்கம் 80 சதவீதத்தினால் குறைவடைந்திருப்பதாக அவரது தாயார் தெரிவித்துள்ளார்.



மண்டையோட்டில் பொருத்தப்படு கின்ற இந்த மூளைக் கட்டுப்பாட்டுக் கருவி, மின்னலைகளை மூளைக்குச் செலுத்தி, வலிப்பு ஏற்படுவதைக் கட்டுப்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. (ஐ)

# காசாவின் அவசர சிகிச்சை பிரிவு இயக்குநர் தாக்குதலில் மரணம்!

டெல்அவிவ், ஜூன் 26

காசா நகரில் உள்ள மருத்துவமனையில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் காசாவின் அம்புலன்ஸ் மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவின் இயக்குநர் கொல்லப்பட்டார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

இஸ்ரேலுக்கும் காசாவுக்கும் இடையே கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் தொடங்கிய போர் தற்போது வரை நடைபெற்று வருகிறது. காசா மீதான இஸ்ரேல் போரில் 37 ஆயிரத்து 626 பேர் கொல்லப்பட்டனர். 86 ஆயிரத்து 98 பேர் காயமடைந்துள்ளனர். ஹமாஸ் தலைமையிலான தாக்குதல்களால் இஸ்ரேலில் இறந்தவர்களின் எண்ணிக்கை 1,139 ஆக உள்ளது.

இதனிடையே, வடக்கு காசாவில் உள்ள கமல் அத்வான் மருத்துவமனையில் ஊட்டச்சத்து குறைபாட்டால் மேலும் இரண்டு குழந்தைகள் இறந்தன. பசி, பட்டினியால் இறந்தவர்களின் எண்ணிக்கை 31 ஆக உயர்ந்துள்ளது என்று சுகாதார அதிகாரிகள் கூறுகின்றனர்.

இஸ்ரேல் போர் நீடித்து வரும் நிலையில், காசாவில் 21 ஆயிரம் சிறுவர்கள் காணாமல் போயுள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில், காசா நகரில் உள்ள மருத்துவ பிரிவில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் காசாவின் அம்புலன்ஸ் மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவின் இயக்குநர் கொல்லப்பட்டாரெனத் தகவல் வெளியாகியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா தொழிற்சாலை ஒன்றில் நேற்றுக் காலை பாரிய தீ விபத்து!

## பல இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்களும் தீயில் எரிந்து நாசம்



வவுனியா, ஜுன் 26

**வவுனியாவில் தொழிற்சாலையுடன் இணைந்த களஞ்சியசாலையில் ஏற்பட்ட பாரிய தீ விபத்து காரணமாக பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன.**

வவுனியா, மரக்காரம்பளை பிரதேசத்தில் உள்ள தொழிற்சாலையுடன் இணைந்த களஞ்சியசாலை ஒன்றிலேயே நேற்று திடீரென தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

வவுனியா, மரக்காரம்பளை பகுதியில் அமைந்துள்ள அலுமினியம் மற்றும் பிளாஸ்ரிக் தொழிற்சாலை, வீட்டுத் தளபாடங்களின் களஞ்சியசாலை என்பவற்றை உள்ளடக்கிய தொழிற்சாலையிலேயே இவ்வாறு தீ விபத்து ஏற்பட்டுள்ளது.தொழில் சாலையில் பணி புரிந்த இருவர் சாப்பாட்டுக்காக வெளியில் சென்ற நிலையில் இந்தத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

குறித்த தீ விபத்தையடுத்து வவுனியா நகரசபை தீயணைப்பு பிரிவினர், பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் அப்பகுதி மக்களுடன் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர நீர்த்தாரை வீசி நடவடிக்கை எடுத்திருந்தனர்.

எனினும் தீ விபத்தில் தொழிற்சாலை முழுமையாக எரிந்து சாம்பலாகியுள்ளதுடன், பல இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்களும் தீயில் நாசமாகியுள்ளன.

இந்நிலையில் தீ விபத்துக்கான காரணங்கள் குறித்து ஈச்சங்குளம் பொலிசார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# நீதி அமைச்சர் வெளியிட்டுள்ள கருத்து நீதிமன்ற சுயாதீனத்தன்மைக்கு சவால்

## நீதிச்சேவைகள் சங்கம் கண்டனம்

கொழும்பு, ஜுன் 26

நீதியமைச்சர் நீதிமன்ற கட்டமைப்பு தொடர்பில் விமர்சித்து முன்வைத்த பொறுப்பற்ற கருத்துக்கள் நீதிமன்ற சுயாதீனத்தன்மைக்கு சவால் விடுப்பதாக, இலங்கை மாவட்ட நீதிபதிகள் மற்றும் நீதவான்களை உள்ளடக்கிய இலங்கை நீதிச் சேவைகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த 19ஆம் திகதி பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தின்போது, அரசியல் ரீதியிலான தமது இருப்பை சவாலுக்கு உட்படுத்தும் வழக்குகளின்போது நீதிமன்றத்தின் சட்டத்திற்கமைவான தீர்ப்புகள் காரணமாக அதிருப்தி அடைந்ததால் அமைச்சர் இவ்வாறு கருத்து தெரிவித்துள்ளதாக அந்த சங்கம் தெரிவித்துள்ளது.

நீதிமன்ற தீர்ப்புகளால் திருப்தி அடையாதவர்கள் அரசியலமைப்பின் பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள மேன்முறையீட்டு நடைமுறைக்கு செல்லாமல் பாராளுமன்ற சிறப்புரிமைகளுக்குள் மறைந்து நீதிமன்றத்தை அவதூறு செய்வது ஜனநாயக சமூகத்தின் அடிப்படையான நீதிமன்ற சுயாதீனத் தன்மைக்கு பகிரங்கமாக விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் என அது வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பக்கச்சார்பற்ற நீதிபதிகளின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்துவதற்கான திட்டமொன்று படிப்படியாக நடைமுறைப்படுத் தப்பட்டுள்ளதை தாம் அவதானிப்பதாக, இலங்கை நீதிச்சேவைகள் சங்கம் தெரிவித்துள்ளது.

மேலும் நீதியமைச்சரின் இந்த கருத்துக்களின் இறுதி விளைவாக மக்களின் இறையாண்மை அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் 3 முக்கிய நிறுவனங்கள் மீதான மக்களின் நம்பிக்கை அற்றுப்போவதை தவிர்க்க முடியாது என அந்த சங்கத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# 107 தொழிலதிபர்கள் 20 கோடி வரி ஏய்ப்பு!

கொழும்பு, ஜுன் 26

கடந்த ஆண்டு பதின்மூன்று தொழில்துறைகளைச் சேர்ந்த நூற்றி ஏழு தொழிலதிபர்கள் இருபது கோடி ரூபாய்க்கு மேல் வரி செலுத்தத் தவறிவிட்டனர் என தேசிய தணிக்கை அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரியவந்துள்ளது.

இதேவேளை, சூரியவெவ பிரதேசத்தில் இருபது ஏக்கர் காணியில் கைத்தொழில் பூங்கா அமைப்பதற்காக 25 கோடி ரூபாவுக்கும் அதிகமான செலவு வீணடிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டை கைத்தொழில் பேட்டையில் உள்ள 60 ஏக்கர் காணி எந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்தப்படுவதில்லை என்றும் 17 கைத்தொழில்களுடன் தொடர்புடைய 109 ஏக்கருக்கும் அதிகமான காணிகள் கைத்தொழிலாளர்களுக்கு வழங்கப்படவில்லை எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் புத்தல கைத்தொழில் கிராமத்தில் 43 காணிகள் ஒதுக்கப்பட்ட போதிலும், இருபது கைத்தொழில்துறையினருக்கு 38 காணிகள் மாத்திரமே வழங்கப்பட்டு ஐந்து கைத்தொழில்துறையினரே உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ)

# சுகாதாரமற்ற இடங்களில் உணவு உண்பதை தவிர்க்க எச்சரிக்கை!

கொழும்பு, ஜுன் 26

குழந்தைகள் மத்தியில் இன்புளுவன்சா காய்ச்சல் மற்றும் வயிற்றுப்போக்கு பரவுவது அதிகரித்து வருவதாக கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் குழந்தை வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக சுகாதாரமற்ற இடங்களில் உணவு உண்பதை தவிர்க்குமாறு அவர் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.



கொழும்பில் உள்ள லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் கடந்த சில நாட்களாக நோய்வாய்ப்பட்ட சிறுவர்கள் அதிகம் காணப்படுவதாகவும் இன்புளுவன்சா காய்ச்சலால் பாதிக்கப்பட்ட பல சிறுவர்கள் சிகிச்சை பெற்று வெளியேறியதாகவும் அவர் தெரிவித்தார்

இதேவேளை, இந்த நாட்டில் பறவைக் காய்ச்சல் பரவும் அபாயம் இல்லை எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# பாதாளக் குழுவினர் மறைத்து வைத்த ஆயுதங்களை கண்டறிய நடவடிக்கை

கொழும்பு, ஜுன் 26

நீதித்துறை நடவடிக்கை மூலம் அடையாளம் காணப்பட்ட போதைப்பொருள் கடத்தல்காரர்களில் 91 வீதமானவர்கள் கைது செய்யப்பட்டது போல பாதாள உலகத்தின் மறைத்து வைக்கப்பட்ட ஆயுதங்களைக் கண்டறியும் நடவடிக்கையை ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரதிப் பொலிஸ் மா அதிபர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் இதனை வலியுறுத்தியுள்ளார்.

இதற்காக அரச புலனாய்வுப் பிரிவு, பொலிஸ் விசேட பணியகம், பொலிஸ் விசேட அதிரடிப்படை மற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் என்பனவற்றை ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த கொஸ் கொட தாரக மற்றும் கோனா கோவிலே ரோஹா ஆகியோரிடம் இருந்த துப்பாக்கிகள் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் டுபாயில் உள்ள கரந்தெனிய சுதாவின் ஆயுதக் களஞ்சியசாலையை உடனடியாகக் கண்டுபிடிக்க வேண்டும் எனவும் இங்கு வலியுறுத்தப்பட்டுள்ளது.

நீதி நடவடிக்கைக்காக பாதாள உலகச் செயற்பாட்டாளர்களின் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ள நிலையில், பாதாள உலக அமைப்பினருக்கு சொந்தமான ஆயுதங்களைக் கண்டுபிடிக்கும் நடவடிக்கையை ஜுலை முதல் வாரத்தில் இருந்து ஆரம்பிக்கவேண்டும் என பொலிஸ் மா அதிபர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும் வெளிநாட்டு பாதாள உலகத்தினர் ஆயுதம் ஏந்திய சமூகத்தில் சுற்றித்திரிந்தாலும் இராணுவத்தினர் ஸ்னைப்பர்களை பயன்படுத்த எந்த நேரத்திலும் முடியும் என பொலிஸ் மா அதிபர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதன்படி ஜுலை மற்றும் ஓகஸ்ட் மாதங்களில் முப்படையினரின் உதவியுடன் பாதாள உலகத்தை ஒழிக்கும் நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு பொலிஸ் மா அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆச்சரியமளிக்கும்...

அந்தப் பகுதி மக்கள் ஆச்சரியத்து டன் பார்வையிட்டு செல்கின்றனர்.

பொதுவாக மாவிலை ஒன்று 30 முதல் 35 சென்ரிமீற்றர் கொண்டதாகவே உள்ளது. ஆனால், இந்த மாவிலை 60 சென்ரிமீற்றர் நீளமும் 20 சென்ரிமீற்றர் அகலமும் கொண்டதாகவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கோரிக்கைகளை...

"நாட்டு மக்களின் வரிப் பணத்திலிருந்தே அரச ஊழியர்களுக்கு சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் செலுத்தப்படுகின்றன. அதற்காக இந்த வருடம் ஒதுக்கீடு இல்லாமையால் ஜனாதிபதியால் விசேட நிபுணர்கள் அடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது.

அனைத்து அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபன நியதி சபைகளின் சம்பள முரண்பாடு உள்ளிட்ட ஏனைய விடயங்கள் தொடர்பில் இந்த விசேட நிபுணர்கள் அடங்கிய குழுவில் அனைத்துத் தரப்பினர்களின் பிரச்னை தொடர்பில் குழுவில் ஆராயப்பட்டு, குழுவின் பரிந்துரைக்கு அமைய அனைத்து தரப்பினர்களுக்கும் தீர்வு கிடைக்கும் வகையில் அடுத்த வருட வரவு - செலவு திட்டத்தில் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படும் என்ற உறுதி வழங்கி இருக்கிறோம்.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலையில் சம்பள அதிகரிப்பு மேற்கொள்ள முடியுமான நிலை இல்லை என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். தொழிற்சங்கங்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து போராட்டம் மேற்கொள்ளலாம். ஆனால், அவர்களின் கோரிக்கைக்கு அமைய சம்பள அதிகரிப்போ வேறு கொடுப்பனவுகளையோ வழங்குவதற்கு தற்போது திறைசேரியில் பணம் இல்லை - என்றார். (ஐ)

## அதிகாரிகளை...

பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு சேவைகளை வழங்குவது போன்ற நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது.

கடத்தல்களை ஊக்குவிப்பதாகக் கூறப்படும் தனியார் முகவர் நிலையங்களை இலங்கை அரசாங்கம் உரிமங்களை இரத்து செய்து - தடை செய்தது. வெளிநாடுகளில் அடைக்கலம் புகுந்துள்ள புலம்பெயர் தொழிலாளர்களுக்கு அதிகாரிகள் உதவிகளை வழங்குகின்றனர்.

எனினும், இது தொடர்பான பல விடயங்களில் அரசாங்கம் ஆகக்குறைந்த தராதரத்தை பூர்த்தி செய்யவில்லை. ஆள்கடத்தல் தொடர்பிலான குறைந்தளவு சம்பவங்கள் குறித்தே அரசாங்கம் விசாரணைகளை மேற்கொண்டு வழக்கு தாக்கல் செய்துள்ளது. கடத்தல்காரர்களுக்கான தண்டனைகள் கடுமையாக காணப்படவில்லை. இது கடத்தல்காரர்களை பொறுப்பு கூறவைப்பதற்கான முயற்சிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. பாதிக்கப்பட்டவர்களின் பாதுகாப்பு குறித்து அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடத்தலுக்கு உடந்தையாக உள்ள அதிகாரிகளை பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்துவது குறித்து இலங்கை அரசாங்கம் அக்கறையை வெளிப்படுத்தவில்லை அல்லது பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்த முடியாத நிலையில் உள்ளது.

சிறுவர்களை பாலியல் நோக்கத்துக்காக கடத்திய சந்தேகநபர்களைக்கூட பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்த முடியாத - விரும்பாத நிலையில் அரசாங்கம் காணப்படுகின்றது.

வெளிநாடுகளில் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் கடத்தல் தொடர்பான பல வழக்குகள் உள்ளபோதிலும் இந்த வழக்குகளில் வெளிநாட்டு சட்ட அமுலாக்கல் அதிகாரிகளுக்கு இலங்கை அரசாங்கம் ஒத்துழைப்பை வழங்கவில்லை - என்று குறிப்பிட்டுள்ளது. (ஐ)

## அதிபர்...

தெரிவித்துள்ளது.

இது தொடர்பில், இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் நிர்வாக செயலாளர் சி. சசிதரன் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

"சம்பள உயர்ச்சிக்காக ஒருநாள் விடுமுறையை அறிவிப்போம். அதிபர்கள் ஆசிரியர்களின் வேதன முரண்பாடுகளைத் தீர்ப்பதற்காக 1998 ஆம் ஆண்டு முதல் மாறி மாறி வருகின்ற ஆட்சியாளர்களிடம் சம்பள முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளைக் கையளித்தோம்.

ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் தீர்ப்பதாக வாக்குறுதியளித்து பின்னர் ஏமாற்றப்பட்டோம். இது காலம் காலமாகத் தொடர்கின்றது. இன்றைய கால கட்டத்தில் வாழ்வதற்குப் போதுமான வருமானமின்றி நாம் ஒவ்வொருவரும் கடனாளிகளாக மாறியுள்ளோம்.

இந்நிலையில், தருவதாக உறுதியளித்த வேதனத்தையாவது தருமாறு இந்த அரசிடம் கேட்கிறோம். நீண்ட காலமாக மாணவர்களின் நலன்களிலும், அவர்களின் கல்வியிலும் எத்தகைய பாதிப்புகளும் ஏற்படாதவகையில் எமது அதிபர்கள், ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் செய்துவரும் சேவைக்கு மதிப்பளித்து, சம்பள அதிகரிப்பை வழங்குமாறு நாளை (இன்று) புதன்கிழமை நடைபெறும் ஒருநாள் பணிப்பகிஷ்கரிப்பில் அனைவரும் கலந்துகொள்வோம். இது ஒவ்வொரு அதிபர், ஆசிரியரினதும் தனிப்பட்ட நியாயமான கோரிக்கை. இதனை நாம் அனைவரும் ஒருமித்து, ஒன்றுபட்டு அரசுக்கு எடுத்துரைப்போம்", என்றுள்ளது. (ஐ)

## 15ஆம்...

கோப்பர்நிக்கஸ் சென்டினெல் - 2 என்ற தனது செயற்கைக் கோள் வழியாக எடுத்த பாலத்தின் ஒளிப்படத்தையே வெளியிட்டது.

அதில், இராமர் பாலம் அல்லது இராம சேது என்று அழைக்கப்படும் ஆதாமின் பாலம். இந்தியாவின் தென்கிழக்கு கடற்கரையில் உள்ள இராமேசுவரம் தீவு மற்றும் இலங்கையின் வடமேற்கு கடற்கரையில் உள்ள மன்னார் தீவு இடையே அமைந்துள்ளது. இந்தப் பாலம் இந்திய பெருங்கடலின் நுழைவாயிலான மன்னார் வளைகுடாவை (தெற்கு) வங்காள விரிகுடாவின் நுழைவாயிலான பாக்கு நீரிணையை (வடக்கில்) பிரிக்கிறது.

இந்த பாலம் ஒரு காலத்தில் இந்தியாவையும் இலங்கையையும் இணைத்த நிலத்தின் எச்சங்கள் என்று புவியியல் சான்றுகள் தெரிவிக்கின்றன. இந்த பாலம் 15ஆம் நூற்றாண்டு வரை பயணிக்கக்கூடியதாக இருந்தது. பின்னர் அது பல ஆண்டுகளாக புயல்களால் படிப்படியாக அரிக்கப்பட்டது.

மன்னார் தீவு சுமார் 130 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்டுள்ளது. இலங்கையின் பிரதான நிலப்பகுதியுடன் பாலம் மற்றும் ரயில் பாலம் மூலம் இணைக்கப்பட்டுள்ளது. இதன் எதிர் பக்கத்தில், இராமேசுவரம் தீவு, இந்திய நிலப்பரப்பில் பாம்பன் பாலத்தின் மூலம் இணைக்கப்படுகிறது.

இங்குள்ள கடல் பகுதி கடல்வாழ் உயிரின தேசிய பூங்காவாக அங்கீகரிக்கப்பட்டது. இந்த கடல் 1 முதல் 10 மீற்றர் ஆழம் மட்டுமே கொண்டது. இங்குள்ள நிலப்பரப்பு பறவைகள் இனப்பெருக்கம் செய்யும் இடமாகவும், ஏராளமான மீன்கள், கடல் பசு, டொல்பின் மற்றும் கடல் புற்கள் ஆகியவை ஆழமற்ற நீரில் செழித்து வளரக்கூடிய இடமாகவும் உள்ளதாக ஐரோப்பிய விண்வெளி ஆய்வு மையம் என்று தனது இணையதளத்தில் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய விண்வெளி ஆய்வு மையம் 1975 ஆம் ஆண்டு விண்வெளி ஆய்வுக்காக நிறுவப்பட்ட அமைப்பாகும். இதன் தலைமையகம் பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் அமைந்துள்ளது. இதில் 22 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# புலிகளில் இருந்து என்னை பிரித்து வந்தவர் ரணிலே!

### கருணா சொல்கிறார்

மட்டக்களப்பு, ஜூன் 26

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து என்னை வெளியில் அழைத்து வந்தவர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கதான். இதன் காரணமாகத்தான் யுத்தம் முடிவடைந்தது என்று கருணா என்று அறியப்பட்ட விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், 2003ஆம் ஆண்டு நாங்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து பிரிந்து வந்தபோது மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து என்னை அழைத்து சென்றவர்கள் அலிசாஹிர் மௌலானாவும், அன்வர் ஹாஜியாரும்தான். அன்வர் ஹாஜியாரின் வாகனத்தில்தான் நான் வந்தேன்.

அந்த இருவராலும்தான் நாங்கள் அன்று காப்பாற்றப்பட்டோம். இந்த உண்மை இப்போது வரை யாருக்கும் தெரியாது. இதற்கு முன்னர் இருந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை அதலபாதாளத்தில் தள்ளிவிட்டு சென்றார். அதன் பின்னர் ஜனாதிபதி ரணில் நாட்டை பொறுப்பேற்றதன் பின்னர்தான் நாங்கள் சந்தோசமாகவும் இருக்கின்றோம் - என்றார். (ஐ)

# வரவு - செலவு திட்ட இலக்கை 1991இல் இருந்து எட்டவில்லை!

கொழும்பு, ஜூன் 26

1991ஆம் ஆண்டிலிருந்து இலங்கை வரவு - செலவு திட்ட இலக்குகளை எட்டத் தவறியதன் காரணமாகவே வரவு - செலவு திட்டப் பற்றாக்குறை தொடர்ந்து அதிகரித்துள்ளது என்று வெரிடே ரிசேர்ச் ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

பாராளுமன்ற வழிவகைகள் பற்றிய குழு அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தலைமையில் ஞாயிற்றுக்கிழமை கூடியது. இதன்போது, வெரிடே ரிசேர்ச் ஆய்வு நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட 2024ஆம் ஆண்டு வரவு - செலவு திட்டம் தொடர்பான அறிக்கை தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இதில், அந்த அறிக்கையின் நோக்கங்கள் மற்றும் இலங்கையின் வரவு - செலவு திட்ட செயல்முறையின் பின்னணியை முன்வைத்து, 2024 வரவு - செலவு திட்டத்தில் உள்ள பல்வேறு குறைபாடுகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

மேலும், 2023 வரவு - செலவு திட்டத்தின் வருமான இலக்கு சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் 2024 ஆம் ஆண்டுக்கான வரி விகிதங்களின் அதிகரிப்பு மூலம் சேகரிக்க எதிர்பார்க்கப்படும் வருமானம் பற்றிய தரவுகள் இந்த அறிக்கை மூலம் முன்வைக்கப்பட் டுள்ளன.

பெறுமதி சேர் வரியின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட வருமானம் யதார்த்தமானதா என கணக்கெடுக்குமாறும் 2022 - 2024 காலப்பகுதியில் காணப்பட்ட பணவீக்கம் அரச வருமானத்துக்கு ஏற்படுத்திய தாக்கம் தொடர்பான அறிக்கை ஒன்றை வழிவகைகள் பற்றிய குழுவுக்கு முன்வைக்குமாறு வெரிடே ரிசேர்ச் ஆய்வு நிறுவனத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார் சம்பிக்க ரணவக்க எம். பி.

அத்துடன், அரசால் முன்மொழியப்பட்டுள்ள சொத்துகள் வரி தொடர்பான ஆய்வறிக்கை ஒன்றையும் வழிவகைகள் பற்றிய குழுவுக்கு வழங்குமாறும் வெரிடே ரிசேர்ச் நிறுவனத்திடம் கோரப்பட்டுள்ளது. (ஐ)

## யாழ்...

இருந்த அ. சிவபாலசுந்தரன் ஓய்வு பெற்றமையைத் தொடர்ந்து பிரதீபன் பதில் அரச அதிபராக பதவி வகித்து வந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

நேற்றைய தினம் கொழும்பு மாவட்ட அரச அதிபராக பிரசன்ன ஜனககுமார, களுத்துறை மாவட்ட செயலராக ஜி. எம். ஜனக குணவர்த்தன ஆகியோர் நியமிக்கப்பட்டனர். (ஐ)

## விடுதலை...

இலங்கையில் விடுதலைப் புலிகள் இயக்கம் இராணுவ ரீதியாகத் தோற்கடிக்கப்பட்டாலும், சர்வதேச அளவில் அந்த இயக்கத்தின் செயல்பாடுகள் தொடர்கின்றன. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சர்வதேச செயல்பாடுகள் இன்னும் இந்தியாவின் இறைமையை பாதிக்கும் வகையிலேயே அமைந்திருக்கிறது என்று கூறியிருந்தது.

ஏற்கனவே, விடுதலைப் புலிகள் இயக்கத்தை சட்டவிரோத அமைப்பு அல்லவென்று அறிவிக்குமாறு இந்த தீர்ப்பாயத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இந்த நிலையிலேயே கடந்த 14ஆம் திகதி தீர்ப்பாயம் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

இதற்கு பதிலளிக்க 30 நாட்கள் காலக்கெடு வழங்கப்பட்டுள்ளது. தீர்ப்பாயத்தின் அடுத்த அமர்வு எதிர்வரும் ஜூலை 23ஆம் திகதி நடக்கும் போது விடுதலைப் புலிகள் அமைப்பு சட்டத்தரணி ஊடாக தமது விளக்கத்தை அல்லது ஆட்சேபனையை தெரிவிக்க முடியும் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (அ-ஐ)

## இந்திய...

படுகாயமடைந்த சிப்பாய் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார் என்று கடற்படை தெரிவித்துள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை இடம்பெற்ற இந்த சம்பவத்தில், ரத்நாயக்க என்ற கடற்படை சிப்பாயே உயிரிழந்தார். இந்த சம்பவத்துடன் தொடர்புடைய படகு கைப்பற்றப்பட்டதுடன், அதிலிருந்த 10 மீனவர்களும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றைய தினம் அதிகளவான இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டிருந்தனர். இதையடுத்து காங்கேசன்துறை கடற்படைத் தளத்திலிருந்து சென்ற கடற்படை படகு அங்கு சென்றிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அமைச்சரவையில்...

மத்தியில் எதிர்பார்ப்பையும் சூழ்ச்சியையும் கிளப்பி விட்டுள்ளன என்றும் கூறப்படுகின்றது.

ஜனாதிபதித் தேர்தலை மையப்படுத்தி ஆளும் தரப்பின் நிர்வாகக் கட்டமைப்பை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டே இந்த அமைச்சரவை மாற்றம் நிகழவுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதேசமயம், முன்னாள் அமைச்சர்களான பாட்டாலி சம்பிக்க ரணவக்க, ராஜித சேனாரத்ன, சரத் பொன்சேகா உள்ளிட்ட வர்கள் ஜனாதிபதியுடன் இணையத் தயாராக உள்ளனர். இந்த அரசியல்வாதிகள் ரணில் விக்கிரமசிங்கவுடன் கைகோக்கும் நிகழ்வு இந்த வார இறுதியில் நடைபெறவுள்ளது - என்றும் தெரியருவருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# உலக வங்கியிடமிருந்து 150 மில்லியன் டொலர்!

## ஆரம்ப சுகாதார சேவையை மேம்படுத்த

கொழும்பு, ஜூன் 26

**இலங்கையின் ஆரம்ப சுகாதார சேவையை மேம்படுத்துவதற்காக உலக வங்கி 150 மில்லியன் டொலரை வழங்குவதற்கு தீர்மானித்துள்ளது.**

இந்த தொகையை வழங்குவதற்கு அதன் நிர்வாகக் குழு அனுமதி வழங்கியுள்ளதாக உலக வங்கி அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட இந்த திட்டத்திற்கு "இலங்கை ஆரம்ப சுகாதார சேவைகள் மேம்பாட்டு திட்டம்" என பெயரிடப்பட்டுள்ளது.

மாவட்ட மருத்துவமனைகள், மத்திய மருந்தகங்கள், பல் மருத்துவ கிளினிக் மற்றும் சுகாதார மருத்துவ அதிகாரிகளின் அலுவலகங்கள் போன்றன இதில் உள்ளடங்கும்.

குறித்த நிறுவனங்களில் சிகிச்சையின் தரத்தை மேம்படுத்துவதே இந்த திட்டத்தின் நோக்கமாகும்.

இதனூடாக நாடு முழுவதும் காணப்படுகின்ற ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆரம்ப மருத்துவ சேவை நிறுவனங்கள் பயனடையவுள்ளன. (அ)



# அனலைதீவு மக்கள் நேற்று போராட்டம்!

## கரையோரப் பாதுகாப்பு திணைக்களத்திற்கு எதிராக

யாழ்ப்பாணம், ஜூன் 26

நீண்ட காலமாக புனரமைக்கப்படாமல் காணப்பட்ட இறங்குதுறையை தற்காலிகமாக புனரமைத்தமைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாக கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் அறிவித்துள்ளமைக்கு எதிர்ப்பு தெரிவித்து அனலைதீவு மக்கள் நேற்று செவ்வாய்க்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடலால் சூழப்பட்டுள்ள அனலைதீவுக்கான போக்குவரத்து கடல் வழியிலேயே இடம்பெற்று வருகின்றது.

ஊர்காவற்றுறை கண்ணகி அம்மன் துறைமுகத்திலிருந்து அனலைதீவுக்கு படகுச் சேவை நடைபெறுவது வழக்கம்.

மிக நீண்ட காலமாக அனலைதீவு இறங்குதுறைப் பகுதி சீரமைக்கப்படாமல் காணப்பட்டு வருகின்றது.

இதனிடையே, அனலைதீவு ஐயனார் ஆலயத்தின் கட்டடங்கள் புனரமைப்பு வேலைகளுக்காக இடிக்கப்பட்டு வருகின்றன.

அந்த இடிபாடுகளை இறங்குதுறையின் கரைப் பகுதிகளில் பரவி தற்காலிகமாக சீரமைக்கும் நடவடிக்கை ஆலய நிர்வாகத்தாலும் கிராமத்து மக்களாலும் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து, அங்கு சென்ற கரையோர பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள் குறித்த சீரமைக்கப்பட்ட பகுதியை அகற்றி அதிலிருந்து கட்டட இடிபாடுகளை முற்றாக அகற்றுமாறும் இல்லையேல் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கால அவகாசம் வழங்கியிருப்பதாக தெரியவருகிறது.

இதனையடுத்து, குறித்த பகுதியை முன்னர் இருந்தது போல சீரமைக்கும் நடவடிக்கையை ஆலய நிர்வாகம் முன்னெடுத்திருக்கிறது.

இருந்தபோதிலும், அங்கு திரண்ட கிராமத்து மக்கள் குறித்த நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டாம் என்று மறித்ததுடன், அங்கிருந்து இடம்பெறும் படகுச் சேவைகளையும் இடைநிறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# மகிந்த சிந்தனையுடன் இணங்கி செயல்படும் ஒருவருக்கே ஆதரவு

## மொட்டுக் கட்சி தீர்மானம்

கொழும்பு, ஜூன் 26

பொதுஜன பெரமுனவினால் நியமிக்கப்படும் அல்லது ஆதரவு வழங்கப்படும் வேட்பாளர் மகிந்த சிந்தனையுடன் இணங்கி அதன் கொள்கைகளுடன் செயற்படும் ஒருவராக இருப்பது அவசியம் என அகில இலங்கை செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் அகில இலங்கை செயற்குழு மற்றும் அரசியல் சபைக் கூட்டம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன் தினம் விஜயராமவில் உள்ள உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றது.

இதன்போது இந்தத் தீர்மானம் எட்டப்பட்டது.

இந்தக் கூட்டத்தின் பின்னர் கருத்துரைத்த பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித்த அபேகுணவர்தன, இன்னும் கட்சியின் வேட்பாளர் தொடர்பில் இறுதித் தீர்மானம் எட்டப்படவில்லை எனத் தெரிவித்தார்.

உரிய நேரத்தில் வேட்பாளர் தொடர்பான தீர்மானத்தை பொதுஜன பெரமுன வெளியிடும் என ரோஹித்த அபேகுணவர்தன குறிப்பிட்டார். (அ)

# யாழில் மாணவியிடம் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டவர் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 26

பாடசாலை மாணவிக்கு மோட்டார் சைக்கிள் ஓடக் கற்றுத் தருவதாகக் கூறி பாலியல் சேட்டை புரிந்த 44 வயதான முச்சக்கர வண்டி சாரதியைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மாணவி ஒருவரை அவரது கல்வி நடவடிக்கைக்காக ஏற்றி இறக்கும் சேவைக்காக முச்சக்கர வண்டிச் சாரதி ஒருவரை மாணவியின் பெற்றோர் வாடகைக்கு அமர்த்தியுள்ளனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் தனது முச்சக்கர வண்டி திடீரென பழுதடைந்து விட்டதாகக் கூறி குறித்த சாரதி, மாணவியை தனது மோட்டார் சைக்கிளில் அழைத்துச் சென்றுள்ளார்.

இதன்போது மாணவியிடம் மோட்டார் சைக்கிள் ஓடக் கற்றுத் தருவதாகக் கூறி, மாணவியை முன் இருக்கையில் அமர்த்தி குறித்த நபர் பாலியல் ரீதியான சேட்டை புரிந்துள்ளார்.

வீடு திரும்பிய மாணவி இது தொடர்பில் பெற்றோரிடம் தெரிவித்ததையடுத்து, பெற்றோரால் யாழ் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளிக்கப்பட்டது.

இதனையடுத்து முச்சக்கர வண்டிச் சாரதியைக் கைது செய்த பொலிஸார் அவரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து இது குறித்த மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஜூன் 26

இலங்கை அரசாங்கம், கடன் கொடுனர்களுடன் கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன, அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் இத்தகவலைத் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கைக்குக் கடன் கொடுத்த நாடுகள் சிலவற்றுடன் கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தம் இன்று கைச்சாத்திடப்படுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

ரொய்ட்டர்ஸ/க்கு வழங்கிய செவ்வி ஒன்றில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

இது தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நேற்று முன் தினம் அமைச்சரவைக்கு விவரங்களை வழங்கியதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# விஜயதாசவுக்கு எதிரான தடை உத்தரவு நீடிப்பு!

கொழும்பு, ஜூன் 26

நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ சுதந்திரக் கட்சியின் தலைவராகவும் அக்கட்சியின் உறுப்பினராகவும் செயற்படுவதைத் தடுக்க விதிக்கப்பட்ட தடையை மேலும் நீடிக்க கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளது.

சுதந்திரக் கட்சியின் பொருளாளர் அமைச்சர் லசந்த அழகியவண்ணவினால் இந்த முறைப்பாடு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, எதிர்மனுதாரர்களுக்கு ஆட்சேபனைகளை தாக்கல் செய்ய நீதிமன்றம் அவகாசம் வழங்கியது.

அதனையடுத்து, குறித்த முறைப்பாட்டை எதிர்வரும் ஜூலை மாதம் 09ஆம் திகதி மீளப்பெறுமாறு உத்தரவிட்ட நீதிமன்றம், அன்றைய தினம் வரை பிறப்பிக்கப்பட்ட தடை உத்தரவை நீடிக்குமாறு உத்தரவிட்டுள்ளது.

# போக்குவரத்துச் சபை வருமானம் அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 26

கடந்த 20 ஆம் மற்றும் 21 ஆம் திகதிகளில் இலங்கை போக்குவரத்துச் சபை அதிகரித்த வருமானத்தை ஈட்டியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் லலித் டி அல்விஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த 20 ஆம் திகதி 29 மில்லியன் ரூபாய் வருமானமாக ஈட்டப்பட்டுள்ளது.

கடந்த 21 ஆம் திகதி 35.8 மில்லியன் ரூபாய் வருமானமாக ஈட்டப்பட்டுள்ளது.

பொசன் பூரணைத் தினத்தை முன்னிட்டு அனுராதபுரம் மற்றும் பொலனறுவை பகுதிகளுக்கு நடத்தப்பட்ட விசேட பஸ் சேவையின் மூலம் இந்த வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் லலித் டி அல்விஸ் தெரிவித்துள்ளார்.

# குடிசை மீது விழுந்தது பனை காரைநகரில் சிறுவன் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 26

காரை நகர் பகுதியில் பனை மரம் ஒன்று அருகில் உள்ள குடிசை ஒன்றின் மீது விழுந்ததால் சிறுவனொருவன் காயமடைந்தான். இந்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

நேற்று முன் தினம் மாலை திடீரென வீசிய பலத்த காற்றினால், காரைநகரில் உள்ள களபூமி பகுதியில் உள்ள பனை மரமொன்று முறிந்து, அருகில் இருந்த ஓலைக்குடிசை மீது வீழ்ந்தது. அந்தக் குடிசைக்குள் 4 அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பமொன்று வசித்து வந்தபோதும், தெய்வாதீனமாக பாரதூரமான பாதிப்புகளின்றித் தப்பினர்.

எனினும் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த சிறுவனுக்கு சிறுகாயங்கள் ஏற்பட்டதை யடுத்து, அவர் பிரதேச மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.06.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.